CHAPTER 1

## அய்யாவை முட்டப்பதிக்கு அழைத்தல்

இந்தப் படியே இவர் வாழும் நாளையிலே
சொந்தத் திருமால்க்கு சுவாமி யுரைத்தபடி
ஆண்டாறு சென்று அதிகத் தவமதுதான்
கூண்டாய் முடித்துக் குருநாதக் கண்மணியும்
இனிநாம் செய்யும் இயல்பென்ன என்றுசொல்லி
மனிதவ தாரன் மனதில் நினைத்திருக்க
நன்றான முட்டப் பதிதலத்தில் நாரணரும்
மன்றாடும் நல்ல வாய்த்தபர மேசுரரும்
வேதப் பிரமன் விளங்கு மறையோனும்
நாத ரிஷிமாரும் நல்லசங்கத் தோர்களுமாய்ச்
சத்தி யுமையும் சரசு பதிமாதும்
வித்தை முகத்து வேழ முகத்தோனும்
எல்லோரும் வந்து இருந்தார் கடலருகே
அல்லோரும் வந்து அங்கே யிருந்துகொண்டு
ஏற்ற முனியில் இரண்டுபே ரைவருத்திச்
சித்த முடனே திடீரெனவே நீங்கள்சென்று
நம்முடைய பாலன் நல்லவை குண்டரையும்
எம்முடைய அருகில் இப்போ கொடுவரவே
சொல்லி யயைச்சார் சுவாமிதா னென்றுசொல்லி
நல்லியல்பாய்ச் சொல்லி நாரணனை யிங்கழையும்
வாருங்கோ முனியே வாய்த்த தவத்தோரே
சேருங்க ளங்கே திடீரெனவே யிப்போது
என்று விடைகள் இருவருக் குங்கொடுக்க
அன்று முனிகள் அவ்வாயு போல்விரைவாய்க்
கடிதாய் நடந்து கரியமால் நற்றவசு
முடிவாகச் செய்த முகுந்தன் பதியில்வந்தார்

விருத்தம்

வந்தனர் வைந்தர் பாத மலரிணை முனிமார் கண்டு
செந்தமிழ் ஆயன் பெற்றச் சேயிது கண்ணோ விண்ணோ
கந்தரக் கலியை வென்றுக் கனதர்மப் புவியை யாள
முந்தநல் தவங்கள் செய்து முடித்தவா பேற்றிப் பேற்றி

விருத்தம்

பொல்லாக் கலியில் வந்திருந்து பெண்ணோ டவனிப் பொன்னாசை
மண்ணோ டுண்ணு மதத்தாசை மாய்கை விழியார் மருட்டாசை

மண்ணோர் தவத்துள் எணுகாமல் பவமே யறுத்துப் பார்வைவிழி
கண்ணோ ஞானக் கருவிருத்திக் கண்டாய்ப் பொருளைக் கண்டாயே

விருத்தம்

அய்யா வுமது தவமதுவால் அரம்பை மாத ரன்றுபெற்ற
மெய்யாஞ் சான்றோர் கெதிகள்பெற்றார் மேவலோரு மிகப் புகழ்ந்தார்
பொய்யாங் கலிய னுயிரிழந்து போனா னரக மீழாமல்
அய்யா முட்டப் பதிதனிலே அழைத்தா ருந்த னப்பனென்றார்

விருத்தம்

அழைத்தா ரெனவே சொன்னவுடன் ஆதி முனியை மிகநோக்கிப்
பிழைத்தார் போலே மனமகிழ்ந்து பின்னு முனியோ டுரைபகர்வார்
இழைத்த கலியி னுள்ளிருத்தி என்னைக் கலியன் செய்தவலு
சழத்த மறிந்து வந்தாரோ சமய மிதுவோ தானுரைப்பீர்

நடை

நல்ல முனியே நம்மைக் கலியதனுள்
செம்மைகெட்ட நீசத் தீபாவிக் கையதிலே
கண்ணியிட்டு வைத்துக் கடக்கே நகண்டிருந்த
புண்ணியவா னின்று பிழைத்துக் குதித்தாரோ
நான்பட்ட பாடு நாடுபதி னாலறியும்
ஏன்பட்டா யென்று இன்றுகேட்க வந்தாரோ
ஏதோ தெரியலையே என்னுடைய நாயகமே
பாதகன்தான் செய்த பாராத்தியங் களெல்லாம்
பார்க்கும் படியாய்ப் பாரிக்கி றேனெனவே
ஆர்க்க முடனே அந்நீசன் செய்தபடிக்
கட்டுங் கயிறும் கையில் விழுந்திடத்தில்
முட்டுக்கு மேலே ஊற்ற மிகநினைத்தார்
வெடிப்புடங்கு தன்னால் விலாவி லிடித்திடத்தில்
துடிப்புடனே ஊற்றம் தோன்றும் படியேவைத்தார்
மேலில் பிரம்பால் மிக்க அடித்திடத்தில்
சீல முடனே சிணந் தோணவைத்தனரே
கன்னமதில் கம்பால் கனக்க அடித்திடத்தில்
உன்னித மாக உடன்தோண வைத்தனரே
கூண்ட முடியைக் குலுக்கியசைத் திடத்தில்
வேண்டு முடியை மிகக்கழிய வைத்தனரே
இப்படியே நீசன் செய்த இடறதுபோல்
அப்படியே தோணவைத்து ஆங்காரங் கொண்டனரே
பால்மாட்டை நீசன் பற்றிக்கொண்டே யடைத்து

மால்பா லேற்கும் மாதிரியைப் பார்ப்போமென
இந்தநாள் வரைக்கும் இருந்ததொன் றானதுக்குள்
அந்தநீ சன்தான் அநியாய மாகவேதான்
கொண்டு அடைக்க கோவேங் கிரிநாதன்
அன்றுமுத லிருபத் தொருநாள துவரைக்கும்
கோல மெடுத்துக் குருச்சமைந்த நாரணரும்
பாலுமுதல் வேறு பண்டமொன் றேராமல்
இருக்குந் தறுவாய் இதுநல்ல தாகுமென
அருக்காக நீசன் அவன்செய்த வேதனைபோல்
எல்லா முறைபோல் எடுத்தார் சொரூபமது
நல்ல முனிமார் நாரணா என்றுநிற்க
கைக்குள்ளே நின்ற கரியசீ சன்மாரில்
மெய்க்குள் ளறிய விளம்பினா ரெம்பெருமாள்

விளக்கம்:

துவையல் பண்டாரங்கள் எல்லாம் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த வேளையிலே நாராயணமூர்த்தி உரைத்தபடி வைகுண்டருடைய ஆறாண்டு தவமானது சிறப்பாக நிறைவேறி இருந்தது. அப்போது நாராயணரும் வாய்ந்த பரமேஸ்வரரும் வேதன் பிரம்மாவும் மறையோரும், ரிஷிமார்களும் சங்கத்தவர்களும் சக்தி உமையவளும் சரஸ்வதி மாதும் எல்லோரும் வந்து கடற்கரை அருகே வந்து இருந்தார்கள் அவர்கள் வந்து அங்கே இருந்து கொண்டு ஏற்ற முனிவராகிய கலைமுனி ஞானமுனியை வரவழைத்து , நீங்கள் சென்று வைகுண்டரை இங்கே அழைத்து வாருங்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தார்கள் . அதன்படி இரண்டு முனிவர்களும் வைகுண்ட ரிடம் சென்று தந்தையாகிய நாராயண மூர்த்தி அழைக்கின்றார் வர வேண்டுமாம் என்று அழைப்பதற்காக வந்தார்கள். வந்த அந்த இரண்டு முனிவர்களும் வைகுண்டருடைய பாதத்தை பணிந்து செந்தமிழாயன் பெற்ற சேயிது கண்ணோ விண்ணோ கந்தர் கலியை வென்று கனத்தர்ம புவியை ஆள்வதற்காக முந்த நல் தவங்கள் செய்து முடித்தவா போற்றி போற்றி என்று போற்றி நின்றார்கள்

மேலும் பொல்லாக்கலியில் வந்திருந்து இந்த கலியில் இருக்கக்கூடிய பெண் ஆசை பொன்னாசை மன்னாசை என்ற மூவாசைகளையும் துறந்து பாவ வினைகள் அணுகாமலும் கலிமாயை அண்டாத வண்ணமும் ஞான கருதுத்தில் இறைவனை கண்டவரே என்று வணங்கி நின்றார்கள். ஐயாவே உமது தவத்தினால் தெய்வ மாதர்கள் பெற்ற சான்றோர் மக்கள் எல்லோரும் நற்கதிகள் பெற்றார்கள் என்றும் இந்த பொல்லாத கலியானது உயிரிழந்து நரகில் சென்று விட்டது என்று கூறி வணங்கி, உம்மை நாராயண மூர்த்தி முட்டம் பதி தனிலே அழைக்கின்றார் என்று வைகுண்டரிடம் இரு முனிவர்களும் கூறினார்கள்.

இரண்டு முனிவர்களும் வைகுண்டரிடம் நாராயணமூர்த்தி அழைத்தார் என்று கூறியவுடன் அந்த முனிவர்களை பார்த்து வைகுண்ட சுவாமி கூறுகின்றார், இந்த கலியினுள் இருந்து என்னை கலியன் செய்த வலுவெல்லாம் அறிந்து இப்போது என்னை பார்ப்பதற்காக அழைக்கின்றாரோ என்றுக் கூறினார். அந்த முனிவர்களிடம் மேலும் வைகுண்டர் கூறுகின்றார் நல்ல முனிவர்களே இந்த கலியதனுள் செம்மை கட்ட நீசன் தீபாவி கையதினால் எவ்வளவு துன்பங்களை அடைந்திருக்கின்றேன். புண்ணியவான் இன்று பிழைத்து குதித்து வந்தாரோ. நான் பட்ட பாடு ஈரேழு பதினான்கு லோகங்களும்

அறியும். ஆனால் இதுவரையும் கேட்காமல் ஏன் பட்டாய் என்று இன்று கேட்க வந்தாரோ ஏதோ தெரியவில்லையே என்னுடைய நாயகமே என்றார்.

மேலும் கலிநீசன் செய்த பாராத்தியங்களை எல்லாம் பார்க்கும் படியாக பாரிக்கிறேன் என்று அந்த நீசன் கயிறு கொண்டு கட்டிய கட்டும் கையில் விழுந்த அடியும் முட்டுக்கு மேலே ஊற்றம் மிக நினைத்தார். வெடிப்புடன் தன்னால் விலாவில் இடித்ததையும் துடிப்புடனே தோன்ற வைத்தார் .மேலும் பிரம்பால் அடித்த அடியையும் உடம்பில் தோன்ற வைத்தார். கன்னமதில் கம்பால் அடித்த அடியை அந்த தோற்றத்தை வெளியில் தெரியும்படியாக தோன்ற வைத்தார். மேலும் தலை முடியை பிடித்து இழுத்து குலுக்கி அசைத்து அந்த முடி மிகக் கழிய செய்த அந்த காட்சியையும் தோன்ற வைத்தார்.

இப்படி நீசன் என்ன என்ன இடது களையெல்லாம் செய்து வைகுண்டசாமியை அடித்து துன்புறுத்தினானோ அத்தனையும் வெளியே தெரியும்படி அங்கே தோன்ற வைத்தார் .பால் மாட்டை நீசன் பற்றி கொண்டே அடித்து மால் பால் ஏற்க்கும் மாதிரியை பார்ப்போமென்று அந்த நீசம் செய்த அநியாயம் அத்தனையையும் இவ்வளவு காலமும் அங்கே பொறுத்துக் கொண்டு இருந்த வைகுண்ட இப்போது ஒவ்வொன்றாக தோன்ற வைத்தார் .

பால் மாட்டை நீ சன் பற்றி கொண்டு போய் அடைத்து வைத்து அந்த இருபத்தொரு நாட்களும் தான் வேறு எந்த பண்ட பதார்த்தங்களும் ஏற்காது உடல் சோர்வாய் இருப்பது போல் காட்டினார். இத்தனையும் செய்துவிட்டு தான் முட்டை பதி செல்வதற்கான தருணம் இது என்பதை சீசன் மார்களுக்கு உணர்த்தினார் .
மேற்படி திருவிளையாடல் ஏன் நடத்தினார் என்று பக்தர்கள் சிந்தித்து தெளிதல் நல்லது கலி சோதனை நடந்து சுமார் ஒரு வருட காலத்திற்குப் பின் அந்நிகழ்வு அப்பொழுதுதான் நடந்ததற்கான காட்சிகளைக் காட்டினார் என்றால் அவர் மனுநிறம் காட்டியது அந்த மாயாதி சூட்சனின் மாய விளையாட்டு என்பதை உணர்ந்து தெளியும் பொருட்டே ஆகும்.

இதிலிருந்து ஐயா அவர்கள் தான் நினைத்த மாத்திரத்திலே பல சொரூபம் எடுக்கும் வல்லமை உடையவர் என்பதை நாம் இங்கு நினைவு கூற முடியும் .
"என்ன தொலையாத ஏத சொரூபமதும் கண்ணிமைக்கும் முன்னே கனகோடி செய்வோனே" என்று அகிலத்திருவாக்கை நான் இங்கே நினைவு கூறுவோம். தம் விருப்பப்படி தன் அவதார வடிவத்தை மாற்றிக் கொள்ள அவரால் முடியும் ஏனெனில் அவர் பிரகிருதிக்கு கட்டுப்படாதவர் பிரகிருதி தான் அவருடைய விருப்பத்திற்கு உட்பட வேண்டும். கிருஷ்ண அவதாரத்தின் போது அர்ஜுனனின் வேண்டுகோளின்படி விஸ்வரூபம் எடுத்தார்.

அதை மறைத்துக் கொண்டு நான்கு திருக்கரங்களுடன் தோன்றினார். அதன் பிறகு சாதாரண மனித உருவில் காட்சியளித்தார். ஒரே அவதாரத்தில் ஓர் உருவத்தில் வெளிப்படுவதும் முன்பிருந்த உருவத்தை மறைத்துக் கொள்வதும் என்பது பிறப்பு இறப்பு ஆகாதது போல பகவான் ஒரு உருவத்தில் தோன்றி மறைவதும் பிறப்பு இறப்பு ஆகா அது அவருடைய லீலா வினோதமே ஆகும்.

கலி சோதனையின் போது கலிமன்னனுக்கு தம்மை மிக மிக ஒரு எளிய திருக்கோலத்தை தான் காட்டினார் .கலிநீசர்கள் அவரை பனை சிரங்கு இன்னும் பற்றி தெளியல்லையே என்றும் கூனனைப் போல் இருந்து குறுமுழி முழிப்பதென்ன என்று கேலி செய்தனர். கர்மத்தில் கட்டுப்படாத அவன் எந்த வடிவத்திலும்

கட்டுப்படுவதில்லை என்பதே மேற்கூறிய திருவிளையாடல்கள் மூலம் அய்யா நமக்கு உணர்த்துகின்றார்

CHAPTER 2

## அய்யா வைகுண்டர் சுவாமி முட்டம் பதி ஏகல்

அய்யா முட்டப்பதி ஏகல்

இன்றைத் திவசம் இசைந்தமுட் டப்பதியில்
நன்றிப்போ போக நல்மணிக ளாகுதெனச்
சொல்ல அறிந்து சீசன்மார் தாமகிழ்ந்து
நல்லதெனச் சொல்லி நாடி யவரிருக்க
அன்றிரா தன்னில் ஆரு மறியாமல்
நன்றினிய சீசன் நாலுபேர் தாமறிய
வந்த முனியும் வளர்ந்த இருமுனியும்
சொந்தமுடன் நாதன் தொட்டில் மிகஏறி
சீசன்மார் காவிச் சிணமாய் மிகநடக்க
வாசமுள்ள மாமுனிவர் வலமிடமுஞ் சூழ்ந்துவரத்
துடியாகத் தொட்டில் சுவாமி மிகஇருந்து
வடிவான முட்டப் பதிதலத்தில் வந்தனரே
முட்டப் பதியில் முகுந்த னரிநாதன்
கிட்ட வருகும் கிருஷ்ணர்வந்து சேர்ந்திடவே
மகனை மிகக்கண்டு மாவிருப்பத் தோடிளகி
உகமாள வந்த உடையமக னேயுனத
சடமெல்லாம் வாடி சடைப்பானே னென்மகனே
வடவெல்லா மென்னோடு வகுத்துரைநீ யென்மகனே
கண்ணே மணியே கருத்துள்ள நாயகமே
விண்ணே வொளியே வேதத் திருவிளக்கே
கலியில் மிஇருந்து கலக்க மிகஅடைந்த
மெலிவெல்லாஞ் சொல்லி விளம்புநீ யென்மகனே
அடித்ததா ருன்னை அவனிதனில் பேயனென்று
கடுத்தமது செய்தக் கலக்கமெல்லாஞ் சொல்லுவென்றார்
சொல்லென்று மாலும் சிவமு மெடுத்துரைக்க
வல்லபெல மான வைகுண்ட ரேதுரைப்பார்
செந்தூர்க் கடலில் செகலதுக்குள் ளென்னைவைத்து
முந்த எனக்கு மொழிந்த வுபதேசம்
தப்பாமலாறு வருசந் தவசாக
மெய்ப்பாவின் பாலருந்தி வீடுசொத் தெண்ணாமல்
கலிக்காசி யாசை கனாவில் நினையாமல்
அலிக்கியானப் பெண்ணின் ஆசை யணுகாமல்
பக்கக் கிளையாசை பாவித் தினிதாசை
அக்கத்தி னாசை அனுப்போல் நினையாமல்
நல்ல துணியாசை நளின மொழியாசை

சொல்லினிய ஆசை தீன்பண்டத் தினாசை
தேய்ப்புக் குளிப்புச் சிறந்த பொருளாசை
தாற்பரிய மானச் சந்தோசத் தினாசை
பூமியா சைமுதலாய்ப் பேராசை யும்வெறுத்துச்
சாமி யுமதருளால் தொல்புவியி லுள்ளோர்க்குத்
தண்ணீரா லெத்த சர்வ வியாதிமுதல்
மண்ணிலுள்ளோர் யார்க்கும் வாய்த்ததர்ம மாகவேதான்
நோய்தீர்த்து வைத்ததல்லால் நேட்டமொரு காசறியேன்
ஏய்த்துமே காசுபணம் யாரிடமும் கேட்டதில்லை
வாழ்வில்லாப் பேர்க்கு வாழ்வு மிகக்கொடுத்தேன்
தாழ்வடைந் தோர்க்குத் தாழ்வை விலக்கிவைத்தேன்
பிள்ளை யில்லார்க்குப் பிள்ளை மிகக்கொடுத்தேன்
கள்ளமெல்லாம் நீக்கிக் கழிவை வரத்தைவைத்தேன்
வரம்வேண்டி நம்மிடத்தில் வைத்தந்தப் பேய்களையும்
குரமாய் மலையில் கொண்டு எரியவைத்தேன்
ஆயிரத் தெட்டு ஆன திருப்பதியில்
வாயிதமாய் வாழும் வாய்த்ததே வர்தமக்கு
ஞாயமில்லை பூசை நல்லாடு தீபவெலி
தேயமதி லுங்களுக்குத் தேரோட்டமு முதலாய்
ஏற்கப் படாதினிமேல் இராச்சியத்தி லுள்ளவர்தாம்
மார்க்க வைகுண்ட வல்லாத்தான் வந்ததினால்
பூசை படைப்புப் பெலிதீப மேராமல்
வாச முடனே மறைந்திருங்கோ நீங்களெனச்
சட்டமிட்டு வைத்தேன் தரணிபுற் பூண்டுவரை
மட்டை மருந்திலையும் மலைகடலும் வாசுகியும்
வையகத்தை யாளும் மாநீச னுமறிய
மெய்யாய் விரித்து விளம்பிமிகச் சட்டமிட்டேன்
இத்தனை சட்டம் இட்டவர்த்த மானமெல்லாம்
மத்திய மாய்வைத்த மாமுனியோ டேகேளும்
அல்லாமற் பூமிதனில் அவர்களறி யாதபடி
வல்லாமை யாய்க்காசி வழங்குமிலை பாக்குவரை
நானாசை கொண்டு நருட்களிடம் வாங்கினதை
வானாசை யுள்ள மாமுனியோ டேகேளும்
சதுராய் நருளறிய நல்லவெகு அற்புதங்கள்
இதுக்காய் கிணற்றில் ஏகாச்சிலை யுங்காட்டி
இருந்தேன் தவசாய் என்னுடைய நாயகமே
பொருந்தாத காரியங்கள் புத்திக் குளறிமிகச்
செய்துமிகக் காணாது செய்ய மணிவிளக்கே
நிசமிதுவோ என்று நீரவரோ டேகேளும்
இத்தனையுந் தர்மமதாய் யான்செய் திருக்கையிலே
புத்திகெட்ட நீசன் பொல்லாதான் வந்தெனையும்
கட்டி யடித்துக் கைவெடி யாலிடித்து

இட்டிறுக்கி வைத்தான் இரும்பு விலங்கதிலே
நஞ்சிட்டுத் தந்தான் நாடுஞ்சா ராயமதில்
கொஞ்சுங் கடுவாய்க் கூட்டி லடைக்கவென்றான்
நீச னவன்சாதி நிசமாகத் தான்கூடி
ஏசி யெனைப்பழித்த இடறுசொல்லக் கூடாது
ஐயோ அவர்கள் அடித்த அடிகளெல்லாம்
வையம் பொறுக்காதே மாநீசன் செய்தவினை
மாந்திர தந்திரத்தால் வஞ்சனைகள் செய்தெனையும்
கோந்திர மாகக் கொல்லவகை செய்தார்கள்
பாவிகள் செய்த பலவினைகள் சொல்லவென்றால்
தாவு முலகில் தாலமதி லோலையில்லை
என்னைத் தவத்துக்)கு (இருத்தியிது நாள்வரையும்
இன்ன மிரங்கலையோ என்தவசு காணலையோ
அன்றருளித் தந்த ஆண்டு திகையலையோ
இன்று முதற்கலியில் யான்போக வில்லையையா
நம்மாற் கலியில் நனின்றிருக்கக் கூடாது
சும்மா எனைநீங்கள் சோலிபண்ணக் கூடாது
நன்றிசற்று மில்லா நாற வெறுங்கலியில்
கொண்டென்னை வைத்துக் கோலமது பாராதேயும்
இனியென்னாற் கூடாது இக்கலியி லேயிருக்கப்
பனிதவழு மாயவரே பகர்ந்தமொழி மாறாமல்
ஆறு வருசம் அவனித் தவசிருந்தேன்
தாறுமா றுண்டானால் சாட்சியோ டேகேளும்
என்று வைகுண்டர் இத்தனையுஞ் சொல்லிடவே
நன்றினிய மகனை நல்லமுகத் தோடணைத்து
தேறும்படி புத்திசெப்பி இருகழைத்து
கூறுவார் பின்னும் குருநாதக்கண்மணிக்கு

விருத்தம்

கண்ணே மணியே கருவூலமே கனக மணியே ரத்தினமே
விண்ணே வொளியே கற்பகமே வேதச் சுடரே விளக்கொளியே
மண்ணே ழளந்த மலர்பதத்தில் வந்தே குதித்த மலர்க்கொழுந்தே
இண்ணே முதலா யுனக்குநல்ல இயல்பே யாகு தென்மகனே

விருத்தம்

மகனே தவத்துள் ளிருக்கையிலே வருமோ செல்வ மாரார்க்கும்
செகமே ழறியத் தவமுடித்துச் சென்றால் சிவனுக் ககமகிழ்ந்து
தவமே முடித்த நினைவதுபோல் சகல கருமங் கைகூடும்
அகமே யுனக்கு அருளினது அனுப்போல் தவறா தருள்மகனே
நடை

செல்ல மகனே சீமானே நீகேளு
நல்ல மகனே நாரணா நீகேளு
தவவேடம் பூண்டு தவமா யிருக்கையிலே
சிவஞான மல்லால் செல்வம்போல் காணாது
தவசு நிறைவேறித் தமோதரர்க் கேற்று
பவிசு மிகவேண்டிப் பலன்பெற்று வாழ்வார்கள்
மகனே நீயிருந்த மகாதவத் தின்பெருமை
செகமீதே சொல்லத் தொலையுமோ என்மகனே
கள்ள யுகத்தைக் காணாம லேயறுத்து
உள்ள நடுஞாயம் உகத்தீர்ப்புச் செய்துமிக
ஆகாத்த தெல்லாம் அழித்து நரகிலிட்டு
வாகாய்க் குழிமூடி வாசல் தனைப்பூட்டி
மாறிய தில்லாமல் வங்கிஷமுந் தானொழித்து
வேறுவகை செய்து மேலுமொரு நல்லுகமாய்த்
தரும யுகமாய்த் தாரணிக்க மாயருளிப்
பொறுமை மனுவாய்ப் பெரியசான் றோர்வழியை
அன்பாக வைத்து ஆள முடிசூடிப்
பண்பாக வேண்டும் பவிசு மிகவாகச்
சாகா வுலகத் தர்ம பதியாள
வாகாய்த் தவசு வகுத்து முடிக்கையிலே
ஆங்கார மாமோ ஆணுவங்க ளங்காமோ
ஓங்கார மாமோ உற்ற தவசதுக்கு
தவசு நிறைவேறி தான்வந்த தாலேயினி
பவிசு வுனக்குப் பகருகிறேன் கேளெனவே
அருகில்வைத்த மாமுனியை அழைத்தார் திருமாலும்
துரிதமுடன் மாமுனிகள் சுவாமி யெனத்தொழுதார்

விளக்கம்:
ஐயா வைகுண்ட சுவாமியிடம் இரண்டு முனிவர்களும் முட்டப் பதிக்கு ஏக வேண்டும் என்று கூறியவுடன் அன்று இரவே நன்றினிய சீசன் நாலு பேர் தாமறிய சொல்லி வந்த இருமுனியையும் உடன் அழைத்து கொண்டு செல்ல சொந்தமுடன் தொட்டிலில் சுவாமி மிக ஏறி சீசன் மார்கள் சினமாய் மிக நடக்க முட்ட பதித்திருத்தலத்திற்கு சென்றார். மகன் வருவதை கண்ட நாராயண மூர்த்தி ஓடி சென்று எதிர்கொண்டு அழைத்து கட்டித்தழுவி உகமாள வந்த உடைய மகனே உனது சடமெல்லாம் வாடி சடைப்பானே என் மகனே! என்னிடத்தில் சொல் உன்னை அடித்தது யார்? அவனிதனில் உன்னை பேயன் என்று பேசியது யார் சொல் என்று வினவினார்.

சொல்லென்று மாலும் சிவமும் உரைக்க வல்லா தான் வைகுண்ட சுவாமி, செந்தூர் கடலில் என்னை வைத்து முன்னம் எனக்கும் மொழிந்த உபதேசம் தப்பாமல் மெய்ப்பாவின் பாலருந்தி சுயநலம் சற்றும் இன்றி ஆறு வருடம் தவம் செய்து நிறைவேற்றினேன். வீடு, சொத்து ,சுகம் என்று எண்ணாமல் கலி காசு அணுகாமல் பக்ககிளை ஆசை அக்கம் பக்கத்தின் ஆசை, பக்க கிளையாசை, பொன்னாசை அனுப்போல் நினையாமல் நல்ல துணி ஆசை, நளினமுடி ஆசை, ,சொல்லினிய ஆசை தின் பண்டத்தின் ஆசை, தேய்ப்பு குளிப்பு, சிறந்த பொருளாசை ,தார்பரியமான

சந்தோஷத்தின் ஆசை, பூமி ஆசை முதலாய் பேராசையும் வெறுத்து சுவாமி உமது அருளால் நான் இந்த தொல் புவியில் உள்ளவர்களுக்கு தண்ணீர் மண்ணால் சர்வ வியாதிகளையும் தர்மமதால் தீர்த்து வைத்ததல்லாம் நேட்டம் ஒரு ஆசை அறியேன்.

வாழ்வில்லா பேருக்கு வாழ்வு கொடுத்தேன். தாழ்வடைந்தோர்க்கு தாழ்வை விலைக்கி வைத்தேன்.. பிள்ளை இல்லா பேருக்கு பிள்ளை கொடுத்தேன். கள்ளமெல்லாம் நீக்கி கழிவை வரம் வைக்க செய்தேன். பேய்களுடைய வரத்தைப் பறித்து குரமாய மலையில் அக்கினியில் எரிய வைத்தேன். ஆயிரத்தி எட்டு திருப்பதியில் உள்ள தேவர்களுக்கும் பூஜை, புனஸ்காரம், நல்லாடு தீப வெலி, தேரோட்டம் முதல் ஏற்காமல் மறைந்திருந்தோ என்று புல் பூண்டு அறியவும், மட்டை மருந்தில்லையும், மலைக்கடலும் , வாசுகியும் , வையகத்தை ஆளும் மாநீசனும் அறிய சட்டம் இட்டு வைத்தேன்.மேலும் பூமிதானில் வல்லான்மையாய் காசு பணம் வளங்கும் இல்லை பாக்கு வரை நான் ஆசை கொண்ட மக்களிடம் வாங்குனதை வானாசையுள்ள மாமுனிவரிடம் கேளும் என்றார்.

"சதுராய் நருளறிய நல்ல அற்புதங்கள் இதுகாய் கிணற்றில் ஏகாசிலையும் காட்டி" தவசி இருந்ததல்லால் பொருந்தாத காரியங்கள் எவையும் புத்திக்குளறி நான் செய்யவில்லை. இவையெல்லாம் உண்மைதானா என்பதை சாட்சியாக பார்த்திருந்த மனிதர்களிடம் கேளுங்கள் . அதாவது எல்லா உயிர்களும் சொல்லால் விளக்க முடியாத வாழ்வை பெறுகின்ற பொருட்டாக நான் அவர்களுக்கு நன்மை செய்கின்ற விதத்திலே எல்லா செயல்களையும் தர்மம் ஆக செய்திருந்தேன்.

இத்தனையும் தர்மமாக செய்திருந்த என்னை புத்தி கெட்டநீசன் பொல்லாதவன் வந்து கட்டி அடித்து கைவெடியால் இடித்து, இரும்பு விலங்கில் இட்டிறுக்கி வைத்தான். சாராயத்தில் நஞ்சிட்டு தந்தான். கொஞ்சும் கடுவாய் கூட்டில் அடைத்து சோதனை செய்தான். நீசனுடைய சாதி எல்லாம் தீபமாக தான் கூடிய என்னை ஏசிப்பழித்தார்கள். அவர்கள் என்னை அடித்து துன்புறுத்தியது எல்லாம் இந்த உலகம் பொறுக்காது. மந்திர தந்திரத்தால் வஞ்சனைகள் செய்து என்னை கொல்ல வகை செய்தார்கள்.

பாவிகள் செய்த பழ வினைகளை சொல்ல வென்றால் இந்த உலகில் ஓலை எல்லாம் கொண்டு வந்து எழுதினாலும் எழுத்தில் அடங்காது.
என்னை தவத்துக்கு அனுப்பி அன்றருளித் தந்தபடி இதுனாள் வரைக்கும் தவசு இருந்தும் இன்னும் உமது மனம் இரங்கவில்லையா ? என் தவசைக் காணவில்லையா? இன்னும் முடிவு காலம் வரவில்லையா? இனி என்னால் அந்த கலியில் போயிருக்க கூடாது. சும்மா என்னை சோலிப்பண்ணக் கூடாது.

நன்றி சற்றுமில்லாத நாறவெறும் கலியில் இனி என்னை அனுப்பி வைத்து கோலம் பாரதேயும் . இனி என்னால கலியில் போயிருக்க முடியாது. பனிதவமும் ! நீர் சொன்ன மொழி மாறாமல் ஆறு வருஷம் அவனிதனில் தவசி இருந்து விட்டேன். குற்றம் குறைகள் உண்டுமானால் சாட்சிகளை கேளும். என்று இத்தனையும் எடுத்து சொன்னார் .

உடனே மகனை உகந்த முகத்தோடு அணைத்து கண்ணே! மணியே! கருவலமே! என் கனகமணியே ரத்தினமே! பின்னே ஒளியே கற்பகமே! வேதசுடரே விளக்கொளியே ! இன்று முதல் உனக்கு நல்ல இயல்பே ஆகுது என் மகனே என்றார்.

மகனே தவத்தில் இருக்கும்போது யாருக்காவது மகிழ்ச்சி வருமா? ஜகமேழ் அறிய தவமுடித்தால் இறையருளால் எல்லா கருமமும் கைக்கூடும் அதுதானே இயல்பு. ஆகவே உனக்கு நான் அருளி வைத்தது அணு அளவு தவறாது என்று ஆசிகூறினார்.

மேலும் நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் நீ எதற்காக தவம் இருந்தாய்? உன்னுடைய தவத்தில் பெருமை என்ன? என்பதை யாரால் சொல்லி விளக்க முடியும் இந்த கள்ள யுகமாகிய கலியுகத்தை காணாமலே அறுத்து நடு தீர்ப்பு செய்து ஆகாதது எல்லாம் முடியடி வேரில்லாமல் அழித்து நரக குழியில் தள்ளி மூடி விட்டு, இந்த தாரணியை தர்மயுகமாக்கி பொறுமை உள்ள பெரிய சான்றோர் வழியை அன்பாக வைத்து முடி சூடி அரசாள்வதற்காக வேண்டி வாகாக தவசு வகுத்து முடிக்கையிலே ஆங்காரமாமோ? இப்போது தவசு நிறைவேறி வந்ததால் இனி உனக்கு வரும் பவுசுகளை கேட்பாயாக என்று சொல்லிவிட்டு வைகுண்ட மாமனியின் அருகில் சாட்சியாக உலக வலப்பங்களை எல்லாம் பார்த்து இருங்கள் என்று அனுப்பி வைத்திருந்த கலைமுனி ஞானமுனியை அழைத்தார்.

நாராயண மூர்த்தி. உடனே அவர்கள் சுவாமி என அவருடைய பாதத்தை பணிந்து வணங்கி நின்றார்கள் . அப்போது அவர்களைப் பார்த்து இந்த நாள் வரையிலும் இவர் இருந்த நல் தவசியினுடைய சிறப்புகளை எடுத்துச் சொல்லுங்கள் அந்த தவமானது சந்தமோ வீணோ என்பதைக் கூறுவீராக என்று உரைத்தார்.

## Chapter 3
## கலைமுனி ஞான முனியின் சாட்சி மொழிகள்

இந்தநாள் வரைக்கும் இவரிருந்த நற்றவசு
சந்தமோ வீணோ தாமுரைப்பீர் மாமுனியே
அப்போ முனிகள் ஆதி யடிபணிந்து
தப்பெருநா ளில்லை தவத்துக் குறுதியுண்டு
நூலொழுக்க மல்லாமல் நுண்ணிமைகள் தப்பவில்லை
மாலொழுக்க மல்லாமல் மனதுவே றில்லையையா
தப்பாத தவத்தில் சண்டித் தடிநீசன்
சிப்பாயி விட்டுச் சுவாமி தனைப்பிடித்து
முடித்தலையைப் பின்னி முழுநீசப் பாவியவன்
அடித்து விலங்கில் அவன்கொண்டு வைத்தனனே
வைத்துப்பல வேதனைகள் மாநீசன் செய்ததல்லால்
மெய்த்தபுகழ் மாலே இவர்மேலே குற்றமில்லை
என்று முனிமார் இசையத் திருமாலும்
கொண்டுபோய் நீசன் கோட்டிசெய்த ஞாயமெல்லாமல்
இருக்கட்டு மந்த இழிநீசன் செய்ததெல்லாம்
குருக்கட்டு முறையின் குணத்தைமிகச் சொல்லுமென்றார்
உடனே முனிகள் உள்ள மிகமகிழ்ந்து
படபடென நின்று பணிந்து மிகப்போற்றித்
தப்பில்லை யையா தவத்தி லொருபங்கமில்லை
என்று முனிகள் இகபரத்துக் குத்தமமாய்
அன்று உரைக்க அதகத் திருநெடுமால்
நல்ல தெனவே நன்மகனைத் தானாவி

விளக்கம்:
உடனே அந்த முனிவர் இரண்டு பேரும் வைகுண்டர் இருந்த தவத்தில் ஒரு குறையும் இல்லை அவருடைய தவத்தில் உறுதி தான் இருந்தது அல்லாமல் தவறுகள் ஒன்றும் இல்லை ஐயா ,
“**நூல்லொழுக்கமல்லால் நுண்ணிமைகள் தப்பவில்லை**. **மால் ஒழுக்கம் அல்லால் மனது வேறில்லையையா** ”

வைகுண்ட ருடைய தவத்தில் எந்தவித குறையும் இல்லை. தாங்கள் கூறிய நூல் முறைப்படி அவர் தவத்தை நிறைவேற்றினார். வேறு அல்லாமல் எந்த தவறும் அதில் இல்லை. மாலொழுக்கமாகிய பரஞான நாட்டமல்லால் மனதில் வேறு எந்த வித எண்ணமும் இல்லை ஐயா. அவ்வாறு பர ஞான நினைவோடு இருக்கும் போது அந்த மூடனாகிய கலிநீசன் சிப்பாய்களை விட்டு சுவாமியை பிடித்து கட்டி அடித்து தலை முடியை பிடித்து தாறுமாறாக இழுத்து இரும்பு விலங்கில் வைத்து பல வேதனைகளை செய்தான். இவர் மேலே எள்ளளவும் குற்றங்கள் இல்லை என்றனர்.

உடனே நாராயணமூர்த்தி அந்த முனிவர்களிடம் , "இருக்கட்டுமந்த இழிநீசன் செய்வதெல்லாம் குருக்கட்டு முறையின் குணத்தை மிகச் சொல்லுமென்றார். உடனே முனிகள் உள்ளம் மிக மகிழ்ந்து படபடவென்று நாராயணரை பணிந்து மிக மகிழ்ந்து, "தப்பிதங்கள் இல்லை ஐயா தவத்தில் ஒரு பங்கம் இல்லை
நற்பல்லால் வேறு ஞாயக்கேடங்குமில்லை" என்று இரண்டு முனிவர்களும் மகிழ்ச்சியுடன் பணிந்து போற்றி மகாபரத்திற்கு உத்தமனாய் அங்கு பதிலளித்தனர் .

உடனே நல்லதென்று நல் மகனை ஆவி அணைத்து செல்வ மகனே செகலத்துக்குள் வா என்று அழைத்துக் கொண்டு நாராயண மூர்த்தி கடலுக்குள் நடந்தார். தவ முனிவர்கள் எல்லோரும் சங்கீதம் பாடி பின் தொடர்ந்தனர். பாவாணர்களும் பர முனிவர்களும் நாவானர்களும் பாடி போற்றினர். அப்போது வைகுண்டர் திருப்பாற் கடலுக்குள் அழைத்து சென்ற நாராயணர் அங்குள்ள பாலாமிர்தத்தில் அருமை மகனை மூழ்க்கி ஞான முழுக்காட்டி அழுக்கை துடைத்து அஞ்சாட்சரம் அருளினார். அதாவது கலி அழுக்கை முற்றிலுமாக நீக்கி பர நிலையை அருளினார்.

அதாவது சுத்த சத்துவ திருமேனியாக செந்தூர் கடலில் உதித்த மாணிக்க வைகுண்டர், இம்மண்ணகம் வந்தபோது மும்மல கட்டுடைய மனிதர்களும் சிவகெதிப் பெறவேண்டும் என்பதற்காக அவர்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதனைப் போலவே தன்னைக் காட்டிக்கொண்டு தியாகத்தின் மூலம் சிவஞானத்தை போதித்து ஆறு வருடங்கள் மக்களிடையே இருந்தார். இந்த பசுத்துவமுடைய சாதாரண மனிதனைப் போல் இருந்த இந்த நிலை இப்பொழுது மாற்றப்பட்டது என்பதே அழுக்கை துடைத்து என்பதால் அறிவுறுத்தப்படுகிறது.
ஆறாண்டு கால தவமும் இயல்பாய் நிறைவேறி மும் மூவருக்கும் முதல்வனாய் பர பிரம்மமாக வந்தாக்கால், தானானாய் நீயும் தலைவனும் நீ என் மகனே என்ற விஞ்ஞையின்படி தவம் நிறைவு பெற்று சிவ தோத்திர நாயகனாக நாதபிரம்மம் என்னும் நிலையில் இருந்தார் வைகுண்டர்.

நாத பிரம்மமே மாணிக்க வைகுண்டர் என்பதை உணர்ந்த வேத புரோகிதர்கள் அவர்களை வாழ்த்தி வணங்கி ஈசர் முதல் இந்திரரும் தேவர்களும் முனிவர்களும் ரிசிமார்களும் இறைஞ்சி தொழுது நிற்க நீதம் நிறைந்த நீல மணி மண்டபத்தில் எல்லையற்ற பிரபஞ்ச நிலையில் தங்க மணி அரங்கில் பெருவெளியாகிய அந்த பெருவெளியில் ஆதி வைகுண்டர் சமய கொலுவிருக்கின்றார்.

## Chapter 4
## நாராயணர் விஞ்சை அருளல்

செல்ல மகனே செகலத்துகுள் வாநீயென
மகனை மிகக்கூட்டி வாரிக்குள் ளேநடக்கத்
தவமுனிவ ரெல்லாம் சங்கீதம் பாடிவர
பாவாணர் பாட பரமுனிவர் தாம்பாட

நாவாணர் போற்ற நாரா யணர்மகனை
பாற்கடலி லுள்ள பாலமிர்தந் தான்வருத்தி
ஆர்க்க முடனே அருமைமக னைமூழ்க்கி
அழுக்கைத் துடைத்து அஞ்சாட்சர மருளி
முழுக்காட்டி மகனை உகந்தமுகத் தோடணைத்து
வேதப் புரோகி விளங்கி மிகவாழ்த்த
நீதம் நிறைந்த நீலநிற மண்டபத்தில்
தங்க மணியரங்கில் சமையக் கொலுவதிலே
மங்காத ஈசுரரும் மாதவனுந் தேவர்களும்
சத்தி யுமையும் சரசு பதிமாதும்
முத்தியுள்ள தேவர் முனிமார் ரிஷிமாரும்
எல்லோரும் நன்றாய் இறைஞ்சி முறையுமிட
நல்லோர்க் ளெல்லாம் நாடி மிகஇருக்க
வல்ல திருமால் மகனை முகம்நோக்கி
செல்ல மகனே சிறந்ததேதி வந்ததினால்
திருநாள் நடத்தித் தெருவீதி தான்வரவும்
ஒருவாரந் தன்னில் ஒருநா ளிடைவிடாமல்
நித்தந் திருநாள் நீநடத்தி யென்மகனே
சக்திகன்னி மாரைத் தான்வருத்தி மாலையிட்டுக்
கலியாண மங்களங்கள் காட்சித் திருநாளும்
சலியாமற் காசுத் தந்தவர்க ளுண்டானால்
வேண்டிநீ தர்மம் விரைவாய் நடத்தியிரு
ஆண்டத் திருநாள் அதுமுடக்கம் வராமல்
பிச்சிவெள்ளை பச்சரிசி மிளகிலை தேங்காயும்
மிச்சம்பழஞ் சந்தனமும் மிகுபன்னீர் வாடைகளும்
மேற்கட்டி கட்டி மிகுவா யலங்கரித்து
மாற்கட்டுச் செய்து மகிழ்ச்சை டம்மானமிட்டு
இந்தப் படியாய் ஏழுநாளுந் திருநாள்
அந்தப் படிசெய்து அவனியி லாடிக்களித்து
எல்லா முறையும் இயல்பாகக் கொண்டாடி
நல்லாண்டு தேதி நல்லதிவ சம்பார்த்துத்
தெய்வகன்னி மாரைத் தெய்வச்சான் றோரிடமே
மெய்வரம் பான மனுமுறைபோல் தான்பேசிக்
கொடுக்கல்வாங் கல்முறையும் கூறி மிகக்கேட்டுத்
துடுக்கான நல்ல தோகைக்குண மும்பார்த்து
பார்த்துன் னருகில் பணிவிடைகள் செய்யுகின்ற
தோற்றுகின்ற சீசனுடத் தொல்முறை யும்பார்த்து
பதிய முறையும் பாவையர்கள் தம்முறையும்
சதியா யுலகோர் சங்கை யதுபோலே
தங்க நிறமானத் தர்மத் தலைவாநீ
மங்கள மதாக மாலையிடு என்மகனே
என்னோடு கன்னி ஏலமே சொன்னபடி

தன்னோ டினங்கள் தலைவன்மா ரேழ்வரையும்
எடுத்துக் கொடுத்து இளமுலைப்பால் தானூட்டி
கொடுத்து இகனைக் கூறிக்கோ என்மகனே
ஐந்திரண்டு ஆண்டுஅதில் வாழ்ந்திருந்த பின்பு
முந்துமூலப்பதிக்கு முன்மொழிந்த மொழிப்படியே
வந்துநீ சேர்ந்து வகையாக இப்படியே
சாந்தமுடன் வாழ்ந்து தானிருக்கும் வேளையிலே
இப்படியே பெண்கள் இன்னுஞ்சில பேர்களுண்டு
அப்படியே அவரவர்க்கு அந்தந்த வேடமிட்டு
வகைவகையாய் வேசம் மாறி யுருவெடுத்துத்
திகையாம ல்வாக்குச் சொல்லு முறைபோலே
கலியாணக் காட்சி கணக்குத்தீர் வைமுறையும்
வலியானக் கலியில் வாழ்வைமிகக் கொண்டாடிச்
சாம்பசிவக் கோலம் சாருமஞ்ச ணைக்கோலம்
ஆம்பக் குறக்கோலம் ஆடிமிகக் கழித்து
முற்றுந் திருநாள் முழுது மிகநடத்திப்
பத்தும் பெரிய பாலர்தங்கள் வீடேகி
விருந்து மிகவும் விரைவாகத் தானருந்தி
திருந்து புகழ்கிளைபோல் சிலவீட் டமுதருந்தி
பிச்சைபோ லுமருந்தி பெண்வழிச்சோ றுமருந்தி
மிச்சமாய்ப் புவியில் வேண்டும் பவிசுடனே
வெற்றியி டம்மானம் விருதுக் கொடிகள்கட்டிப்
புத்திர ரானோர்க்குப் பிழைக்கும்வலு புத்திசொல்லிப்
பாடித்தீர் வைதீர்த்துப் பரசோ தனைபார்த்து
ஆடித்தீர் வைதீர்த்து ஆண்பெண் மிகவேகண்டு
நல்லாண்டு கண்டு நாடும் மங்கையரைச்
செல்லக் கலியாணம் செய்து சிறப்புடனே
செந்தா மரையா ளுடனே சிறப்பிருந்து
கொந்தார்க்குழலைக் கூடிமிகப்பரிந்து
ஆனை கன்றீணி அதினா லுலகமெல்லாம்
தானாக நீயும் தலைவ னெனச்சமைந்து
முரணிக் கலியழிய முச்சுடரு மொன்றாவாய்த்
தரணி யீரேழும் தடதடெனத் தானசைத்து
நீயதின்மே லாளும் நிண்ணயத்தைக் கேள்மகனே
தங்க முடிசூடிச் சான்றோர்க்கு நால்வரமும்
அங்கவர்க்குத் தானருளி அழகு மிகக்கொடுத்து
நல்லதர்ம மாக நாடும் புவியதிலே
அல்லல்வினை யற்று அவனியதை நீயாள்வாய்
அப்போ நீயரசு ஆளுகின்ற நாளையிலே
செப்பொண்ணாச் செல்வம் சிறப்புமிக வுண்டாகும்
பூமடந்தை வீட்டில் புகுந்து கொலுவிருந்து
தாமுனிந்து நீயும் தரணிதனில் வந்தவுடன்

நான்வந்து உன்னை நாடி மிகஎடுத்துத்
தான்மகிழச் செல்வத் தலைவ னுனையாக்கிச்
சொல்ல வொண்ணாத சுகந்தருவே னென்மகனே
எல்லைக் கணக்கும் ஏழுயுகக் கணக்கும்
தீர்த்து உனக்குத் திருவம்ப லமருளித்
தோற்றும் பதிகள் துலங்கும்வெகு ரத்தினமாய்
எல்லா மருளி ஏழுமாதர் தாஞ்சூழ
வல்லோனாய் நீயும் வாழுவா யென்மகனே
மலங்காதே யென்மகனே மாதவங்கள் பெற்றவனே
கலங்காதே யென்மகனே கண்ணேயென் கற்பகமே
என்று மகனுக்கு ஈதுரைக்கு மிவ்வளவும்
மன்று குலுங்காது வாரி யலுங்காது
மேகங் குடைநிழற்ற மேவலர்கள் போற்றிநிற்க
யோக முனிமார் ஓதித் தமிழ்கூற
ஈசர் மகிழ்ந்து இரத்தின மதிலிருக்க
வாசவனுந் தேவர்களும் வாய்பொற்றித் தாழ்ந்துநிற்க
இப்படியே சங்கம் எல்லா மகிழ்ந்துநிற்க
அப்படியே விஞ்சை யருளினா ராதியுமே

விளக்கம்:

அப்பொழுது வல்லத் திருமால் மகனை நோக்கி இனி நம் மக்களுக்கு எல்லாம் விடிவு காலம் தான். எனவே நீ அவர்களுக்கு இனி வரும் நாட்களை எல்லாம் இனிய நாட்களாக்கி அருள் பாலிப்பாயாக . திருநாள் இகனை நடத்தி தெருவீதி வலம் வர வேண்டும் .ஒரு வாரம் தன்னில் ஒரு நாள் கூட இடைவிடாமல் எல்லா நாட்களும் திரு நாட்களாகவே நடத்தி சிறப்பிக்கப்பட வேண்டும் என்று உபதேசித்தார்.

முட்டம் பதி விஞ்சை -2
மேலும் " **சலியாமல் காசு பணம் தந்தவர்கள் உண்டானால் வேண்டி நீ தர்மம் விரைவாக நடத்து இரு**" மக்கள் தங்களுடைய அன்பினால் தாராளமாக தரக்கூடிய காசுகளையும் பணங்களையும் வாங்கி உடனடியாக தர்மம் செய்து விட வேண்டும் ஏழை எளிய மக்களுக்கு பயன்படும் வகையில் நல்ல காரியங்கள் செய்து அந்த காசை உடனே செலவு செய்து விட வேண்டும் இந்த உபதேசத்தின் மூலம் ஐயா நமக்கு, ஐயாவின் பெயரால் வரும் காசு பணம் எல்லாம் மக்கள் பயன்பெறுகின்ற வகையில் தொண்டு நிறுவனங்கள் அமைத்து செலவு செய்வதே சால சிறந்ததாகும் என்பதை இயம்பியுள்ளார்.

மக்கள் தொண்டே மகேஷ்சன் தொண்டு " என்பதையும் , தொண்டுள்ளம் படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் , அதுவே சிறந்த பேறினை தருகிறது என்பதையும் இங்கே எடுத்து சொல்லுகின்றார். ஆனால் இதனை அறியாதவர்கள் தங்களுக்கு என்று வைத்து கொண்டு மேலும் மேலும் கர்ம வினையை சேர்த்துக் கொள்ளுகின்றார்கள்.

மேலும் தர்ம காரியங்களுக்கு வரக்கூடிய காசு , பொன்,பொருள் போன்றவற்றை நாம் சேமித்து வைத்துக் கொண்டு நாளைக்கு கொடுக்கலாம் என்று கூட நினைக்கக்கூடாது. அவ்வாறு நினைத்தால் அது உள்ளமானது தடுமாறி விட ஏதுவாகிறது.எனவே தான் ஐயா,

“வேண்டி நீ தர்மம் விரைவாய் நடத்தி இரு ” என்றுக் கன்றுக்கு மாதா கற்பித்தது போல கூறியிருக்கின்றார்.

“**ஆண்டர் திருநாள் அதுமுடக்கம் வராமல்**” என்று மேலும் கூறியிருக்கின்றார். இதிலிருந்து நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய தர்மம் எது என்றால், இந்த கலியுகத்தில் “ **தெரியாத பேருக்கு உபதேசம் செப்பி இருப்பது**” ஆகும் . நாம் ஆண்ட திருநாளாக ஆண்டுதோறும் 17 நாள்கள் அல்லது 11 நாள்கள் ஆகம திருவிழாவை நடத்தி வருகின்றோம் . இந்த திருவிழாவில் எள்ளளவு கூட குறை வந்துவிடக்கூடாது காரணம் என்னவென்றால் , இந்த கலியுகத்தில் தன்னிலை உணராமல் அறியாமையில் உழன்று கொண்டிருக்கும் மக்களை ஆன்ம விழிப்படையச் செய்து இறைஞானப் பெறச்செய்வதே இந்த கலியுகத்தின் உடைய மிகப்பெரிய தர்மம் ஆகும். அந்த நிலையில் இருந்து நாம் தவறி விட்டு விடக்கூடாது . ஆகவே திருநாள் நடத்துவதில் இருந்து முடக்கம் வராமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் கூறுகின்றார்.

மேலும் “ **வெள்ளை பச்சரிசி மிளகு இலை தேங்காயும்**
**மிச்சம் பழம் சந்தனமும் மிக்க பன்னீர் வாடைகளும்**
**மேற்கட்டு கட்டி மிகுவாய் அலங்கரித்து மால்கெட்டு செய்து மகிழ்ச்சிடம்மானவுடன்**” சிறப்பாக விழா நடத்த வேண்டும் என்பதை சொல்லி இருக்கின்றார். இதிலிருந்து நாம் ஆலய வழிபாட்டுக்கு பயன்படுத்தும் பொருட்களாக வெற்றிலை ,பாக்கு, சந்தணம்,தேங்காய் , எலுமிச்சை பன்னீர் , வாழை பழம் முதலிய பொருட்களையும் பால் வைப்பதற்கு பச்சரிசி, மிளகு, இலை,சிறுமணி, தேங்காய் முதலிய பொருட்களையும் பயன்படுத்த வேண்டும்.

ஏன் இந்த பொருட்களை மட்டும் பயன் படுத்த வேண்டும் என்றால் இவை சத்துவ குணமுடைய வழிபாட்டுக்குரியவை என்றும் இவை தவிர்த்த ஏனைய பொருட்கள் ராஜோ தாமோச குணங்களுக்கு வழிகாட்டுபவை. ஆகவே அவற்றை தவிர்க்க வேண்டும் என்றும் நாம் பிறவி பிணியில் இருந்து விடுபடுவதற்கு சாத்வீக குணத்தை நல்கும் இந்த பொருட்களை நாம் பயன்படுத்த வேண்டும் என்றும், பிறப்பொருட்களைப் பயன்படுத்துவது கூடாது என்பதை எடுத்துக் கூறியிருக்கின்றார்.

பிச்சிப்பூவானது சத்துவ குணத்திற்கு வழிகாட்டுவதோடு மட்டுமல்லாமல் தூய்மையையும் குறிப்பிடுகிறது. இங்கு தூய்மை என்பது ஆசையை அறுப்பதாகும். உணர்ச்சியை தூண்டாதது ஆகும் அதுவே உயிருக்கு தூய்மையானதாகவும் தூய்மை நிலையில் உயிராக இருக்கும் இறைவனை இடைவிடாது நினைப்பதற்குரிய மனத்தூய்மை உருவாக்கும் என்பதால் அந்த பிச்சிப்பூவையே இங்கே பயன்படுத்த சொல்லி இருக்கின்றார். மேலும் பச்சரிசி ஆணவம் கன்மம் மாயை நீக்கி மீண்டும் பிறக்காத நிலையை குறிப்பிடுகின்றது. இந்த உடலில் உள்ள மும்மலங்களை அகற்றக்கூடிய தன்மை இதற்கு இருப்பதால் பச்சரிசியை இங்கே ஐயா சொல்லியிருக்கின்றார்.

மேலும் மிளகு என்பது பந்தபாசம் என்ற ஈரம் முற்றிலும் அற்றது என்பதை காட்டுகிறது. சிறிதும் ஆணவ முனைப்பு இல்லாத ஆன்மாவை பெற வழிக் காட்டுகின்றது. அதனை நாம் பயன்படுத்தும் போது ஆணவத்தை சிதைத்து அழித்துவிடும் என்பதால் மிளகு பயன்படுத்த கூறுகின்றார். வெற்றிலை பாக்கு என்பது வெற்றிலை மங்கல சின்னமான மகாலட்சுமியின் சக்தியையும் பாக்கு சிவத்தைக் குறிப்பதாகும். இறைவனே நமக்கு தாயாகவும் தந்தையாகவும் உள்ளான் என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

முழுத் தேங்காயில் பளபளப்பாக இருக்கும் மேல் தோல் மாயையும் அதனை அடுத்து உள்ளே பிணைந்து இருக்கின்ற தும்புகள் கன்மத்தையும் மூன்றாவதாக உள்ளே இருக்கும் கல் போன்ற ஓடானது ஆணவத்தையும் குறிக்கின்றது. அதாவது மாயையும் கன்மத்தையும் ஆணவத்தையும் விட்டால் மனம் தூய்மை அடையும். தூய்மை யான உள்ளத்தில் இறைவனை காணமுடியும் என்பதே தேங்காய் பயன்படுத்துதல் உட்பொருளாகும்.

மேலும் தேங்காயானது முக்கண்களை உடையது. இதில் இரண்டு கண்கள் போலியானவை. ஒன்று மட்டும் தான் உண்மையாக உயிர்ப்பு சக்தியுடன் விளங்குகின்றது. இதிலிருந்து அக ஞானத்தை தராத போலியான புறக்கண் உணர்விலிருந்து விடுவித்து அக ஞானத்தை தரும் எங்களின் கண்ணாகிய அருள் கண்ணை உணர்வதற்கு அருள் செய்வாயாக என்பதை வேண்டுகின்ற விதமாக நாம் தேங்காய் பயன்படுத்துகின்றோம்.

எலுமிச்சைக்கனி ராஜகனி என்று சொல்லப்படுகின்றது. இது பல அறைகளை கொண்டதாக இருப்பினும் அனைத்திலும் ஒரே விதமான சுவையோடு இருப்பதால் எந்த நிலையிலும் நிலை தவறாது ஒரே தன்மையோடு இருக்கின்ற குணத்தை காட்டுகின்றது. மேலும் சந்தணம், சாந்தியாகிய அமைதியை தருவது ஆகும். அரைக்க அரைக்க மணமும் குணமும் மாறாதது . எந்த நிலையிலும் தன்னிலை மாறாமல் இருப்பது ஆகும்.

பன்னீர் புகழும் மணமும் தருவது ஆகும். மேற்கட்டி ஆன்மா விழிப்படைந்து மேன்மை பெறுவதற்காக வழியைக் காட்டுகிறது.மால் கட்டு என்பது உலகியல் உணர்வுகளில் விழாமல் அய்யாவின் திருவருள் வேண்டி சரணாகதி அடைவதை குறிக்கின்றது. மகிழ்ச்சியிடம் மானம் என்பது சரணாகதி அடைந்த ஒரு ஆன்மாவானது சாதனையால் தன்னுள்ளே கேட்டு மகிழும் அனாதகத் தொனியைக் காட்டுகின்றது. இவ்விதமாக மக்களுக்கு சாத்வீக வழிபாட்டின் மேன்மையை உணர்த்தி ஏழு நாளும் திருநாள் இகனை நடத்தி அருள்வாயாக என்றுக் கூறுகின்றார்.

நல்ல ஆண்டு தேதி நல்ல திவசம் பார்த்து தெய்வ கன்னிமாரை தெய்வச் சான்றோர்களிடமே மெய்வரும்பான மனுமுறை போல் தான் பேசி கொடுக்கல் வாங்கல் முறையும் கூறி மிக கேட்டு துடுக்கான நல்ல தொகையர் குணமும் பார்த்து , உன் அருகில் பணிவிடைகள் செய்கின்ற சீசனுடைய தொல்முறையும் பார்த்து பரிய முறையும் பாவையர்கள் தன்முறையும் சரியாய் உலகோர் சங்கை அதுபோல தங்க நிறமான தர்ம தலைவாணி மங்கலமதாக மாலையிடு என் மகனே என்று கூறியிருக்கின்றார். அதாவது தங்க நிறமான தர்ம தலைவனாக இருக்கின்ற பரம்பொருளாக இருந்து நல்ல திவசம் பார்த்து சப்தமாதர்களை உன்னுடன் ஐக்கியப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கின்றார் .

இதனால் இதை ஒரு இகணையாக ஒரு திருவிளையாடலாக மக்களிடையே நடத்திக் காட்ட வேண்டும். மேலும் மனுமுறை போல் கொடுக்கல் வாங்கல் முறையும் அதாவது மக்களிடம் கொடுக்கல் வாங்கல் முறைகளை பேசி எவ்வாறு மாலையிடுவதற்காக திருமண ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றதோ அதுபோல சான்றோர் மக்களிடம் ஒப்பந்தங்கள் செய்து சப்தமாதர்களை இகனை மணம் மூலம் ஐக்கிய படுத்தி கொள்ள வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல் அவர்கள் விரும்பியபடி அவர்கள் பெற்ற அந்த சான்றோர் மக்களை அவர்களுக்கு எடுத்து காட்டிக் கொடுத்து என்றைக்கும் மூப்பு மரணமும் இல்லாத இளமையோடு இருக்கக்கூடிய நன் அமுதத்தை அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளை அவர்களுக்கு எடுத்து கொடுத்து அந்த சக்தியை சென்றடைந்த ஜீவன் சிவத்தை அடைகின்ற தத்துவத்தையும் பரமபதத்தையும் அருள வேண்டும்.

உலக மக்களுக்கு சிவன் முதல் அனைத்து தெய்வங்களாக இருப்பது நீயே என்பதை உன் திருவிளையாடல் மூலம் வெளிப்படுத்தி அனைத்து திருவருள் சக்திகளையும் உன்னோடு ஐக்கியப் படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அந்த சான்றோர் மக்களுடைய வீடுகளுக்கு சென்று அவர்களிடம் இருந்து விருந்து ஏற்று அவர்களுடைய பாவ புண்ணியங்களை எல்லாம் ஏற்று அவர்களுக்கு நற்கதி அருள வேண்டும். இவற்றையெல்லாம் திருவிளையாடல்களாக நடத்தி மக்களோடு இருந்து அவர்களுக்கு சிவஞானத்தை உணர்த்தி அவர்களை பக்குவமடைய செய்து உன்னோடு சேர்த்துக் கொண்டு செந்தாமரையாளுடன் சிறப்பிருந்து பரிபூரண ஐஸ்வர்யங்களுடன் அவர்கள் தன்னிறைவு என்ற பூரண நிலை எய்தும்படி அருள் பாலிக்க வேண்டும் என்று வைகுண்டருக்கு விஞ்சைகள் அருளினார் நாராயண மூர்த்தி.

மேலும் "ஆனையொரு கன்றீணி அதனால் உலகமெல்லாம் தானாக நீயும் தலைவன் என சமைந்து முரணிக் கலி அழிய முச்சுடரும் ஒன்று ஆவாய் தரணி ஈரேழும் தடதடென தானசைத்து
நீ யதன் மேலாளும் நிர்ணயத்தை கேள் மகனே தங்க முடி சான்றோர்க்கு நால் வரமும் அவரவருக்கு தான் அருளி அழகு மிக கொடுத்து நல்ல தர்மமாக நாடும் புவியதிலே அல்லல் வினையற்று அவனியதை நீ ஆள்வாய் அப்போது நீ அரசு ஆளுகின்ற நாளையிலே செப்பொணாச் செல்வம் சிறப்பு மிக உண்டாகும் என்றுக் கூறியிருக்கின்றார்.

இங்கு ஆனை என்பது ஆன்மாவின் தலைவனாகிய பரம்பொருள் என்பதையும், கன்று என்பது பரம்பொருளின் கருணையின் வெளிப்பாடான ஒப்பற்ற வைகுண்ட மாமணியையும், தலைவன் என்பது சுத்த ஆன்மாக்களை மன்னவர் குமாரர்களை ஆளும் மாமன்னராக பரம்பொருள் இருந்து ஆழ்வார் என்பதையும் குறிக்கிறது. இவ்வாறு பரப்பிரம்ம என்ற நிலையில் இருந்து இந்த உலகை நீ ஆளுவாய் என்று நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் கூறினார்.

முரணி கலி என்பது சாதி சமய இன மொழி போன்ற உணர்வுகள் ஆகும். இது போன்ற உணர்வுகளை கடந்து முச்சுடர் என்ற பிரம்ம நிலையை அடைவாய் என்பதாகும். தரணி ஈரேழு பதினான்கு லோகங்களையும் தான் அசைத்து எல்லாம் ஆன்மாக்களையும் ஆன்ம விளிப்படைய செய்ய வேண்டும். அதன் பின் அனைத்தையும் ஆளும் வல்லமையை பெறுவாய். அப்போது நல்லோரைத் தேர்ந்து எடுத்து ஒளியுடன், வாலைப்பருவம், ஞானக்கண், மெய்யறிவு ஆகிய நாலு வரங்களையும் எல்லா உயிர்களுக்கும் கொடுத்து செப்பொண்ணா செல்வமாகிய பேரானந்தத்தையும் கொடுத்து ஆள கூடிய எல்லா சிறப்புகளும் உண்டாகும்.
கருணை கடலாக இருந்து எல்லா உயிர்களையும் பிறவி பினையிலிருந்து விடுவித்து பேரானந்த நிலையாகிய தர்மபுவியை ஆட்சி செய்வாய் என்று நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் கூறினார்.
பூமடைந்த வீட்டில் புகுந்து கொலை விருந்து தாம் அணிந்து நீயும் தரணியில் வந்தவுடன் நான் வந்து உன்னை நாடிமிக எடுத்து தான் மகிழ செல்வ தலைவனாக உன்னை ஆக்கி சொல்ல ஒண்ணாத சுகம் தருவேன் என் மகனே என்றுக் கூறினார்.

அப்போது எல்லைக்கணக்கும் ஏழு யுகணக்கும் நான் தீர்த்து உனக்கு திருவம்பலமாகிய பரநிலையை அருளி ஏழு மாதர்கள் சூழ வல்லவனாய் நீயும் வாழுவாய் என் மகனே மலங்காதே என் மகனே மாதவங்கள் பெற்றவனே கலங்காதே என் மகனே கண்ணே என் கற்பகமே என்று , வாரி குலுங்காது ஏழு மேகம் குடை நிழற்ற மேவலர்கள் போற்றி நிற்க யோக முனிவர் தமிழ் கூறி நிற்க தேவர்கள் மகிழ்ந்து போற்றி நிற்க வைகுண்டருக்கு விஞ்சையை அருளினார் ஆதியுமே .

## Chapter 5

## வைகுண்டருக்கு தர்மபதியாளும் தருணம் உரைத்தல்

விருத்தம்

விஞ்சையும் பெற்று வைந்தர் விரைவுடன் தகப்பன் பாதம்
அஞ்சையும் புணர்ந்த சோதி அரனையும் வணங்கிப் போற்றி
நெஞ்சையு மொன்றுள் ளாக்கி நிர்மலத் தாயைப் போற்றி
கொஞ்சையுங் குணத்தி னாதன் கூறுவார் குருவைப் பார்த்து

விருத்தம்

என்னையாட் கொண்ட நாதா எங்குமாய் நிறைந்த நீதா
உன்னையான் கண்டு போற்ற உன்னருள் கிருபை தந்தாய்
இன்னமுங் கலியில் போய்நான் இருந்திந்த முறைகள் செய்தால்
என்னையாட் கொண்டு ரத்தினக் கிரீட மெப்போ தீவீரோ

விருத்தம்

கிரீட மெப்போ தீவிரென் றெனக் கேட்ட மைந்தா
அரிவிரி கொண்டே சூடி அணியிடை மாரைத் தோய்ந்து
தரிவிதி யான போதும் தாமரைக் கைநிகழ்ந்த போதும்
பரிவலம் வந்த போதும் பார்மக ளடைந்தா யன்றே

விருத்தம்

உன்விதி யதனால் முன்னூல் ஊறிய அமிர்தந் தன்னால்
என்விதி தன்னால் வந்த இகபர முனக்குள் ளாகி
மன்முறை தெளிந்த தன்றும் மான்கன்று ஈன்ற தன்றும்
பொன்மக ளகன்ற தன்றும் பூமக ளடைந்தா யன்றே

விருத்தம்

பூமக ளுன்னைச் சேர்ந்து பின்னாறு வரைக்கு மேலே
நானுகந் தன்னாற் போக்கி நகரொரு பகற்குள் ளாக்கித்

தானுனைத் தங்க மானத் தயிலமாம் பதத்தில் மூழ்க்கி
வானுனை மகிழ ரத்தின மகிழ்கிரீட மருள்வே னென்றார்

விளக்கம்:

நாராயணமூர்த்தி கூறிய விஞ்சைகளைக் கேட்ட வைகுண்டர் குருவாக இருக்கும் நாராயண மூர்த்தியையும் , தாய் லெட்சுமி தேவியையும் பணிந்து இங்கு பஞ்சபூதங்களில் அவற்றோடு கலந்து உயிர்களைப் படைத்து காத்து ரச்சித்தருளும் பஞ்சகரிய மூர்த்தியாக செயல்படுகின்ற சிவப்பெருமானையும் வணங்கி, ஐயா பிறப்பிலிருந்து இறக்கின்ற வரை உயிர்கள் எந்த நிலையில் இருந்தாலும் இறைவனை விட்டு விலகி சென்று விட முடியாது.

எப்போதும் அவன் தம்மோடு கூட இருக்கிறான். பிறப்புக்கு முன்னும் இறப்புக்கு முன்னும் பிறப்புக்கு பின் இருக்கும் நிலைகளிலும் நம்மை விட்டு ஒரு கணமும் விலகாதவனாக இறைவன் இருக்கின்றான் என்பதை உணர்ந்த ஜோதியாக இருக்கக்கூடிய இறைவன் தன்னை தந்தையாகிய நாராயண மூர்த்தியிடம் கேட்கின்றார். அதாவது எல்லா சக்தியும் தன்னுள் இருந்த போதிலும் தன்னை ஒரு பக்தன் என்ற நிலையில் காட்டிக்கொண்டு ஒரு பக்தன் என்ற நிலையிலிருந்து என்னை யாட் கொண்ட நாதா எங்குமாய் நிறைந்த நீதா உன்னை யான் கண்டுபோற்ற உன்னருள் கிருபை தந்தாய் என்று காரணகுருவாய் இருந்து உபதேசம் செய்யும் தந்தையை போற்றுகின்றார். ஒரு பக்தன் அல்லது சாதகன் என்னதான் உயர்ந்தாலும் இறையருள் இல்லை என்றால் அவன் வெற்றி காண முடியாது என்பதை உலகிற்கு உணர்த்தவே உன்னை நான் கண்டுகொண்டு உன்னருள் கிருபை தந்தாய் என்று தந்தையாகிய நாராயண மூர்த்தியிடம் வேண்டி நிற்கின்றார்.

மேலும் கூறுகின்றார் இன்னும் என்னை இந்த கலியில் போய் மேற்படி இருந்து உரிய முறைகளை நடத்த சொல்லுகின்றீர்களே! நான் அப்படி நடத்துகின்ற போது என்னை ஆட்கொண்டு ரத்தினகிரிடம் எப்போது எனக்கு நீங்கள் அருளுவீர்கள் என்று கேட்டார். அதாவது உலகில் இருக்கக்கூடிய 84 லட்சம் பேதாபேத உயிரினங்களும் எப்போது ஆன்ம ஞான ஒளிப் பெற்று தன்னிலைப் பெறுவார்கள் என்று என்று கேட்கின்றார். அப்போது நாராயணமூர்த்தி சொல்லுகின்றார்,

கிரீடம் எனக்கு எப்போது தருவீர் என்று என்னை கேட்ட மைந்தா! அரிவிதி கொண்டே சூடி அணியிடை மாரை தோய்ந்து தரிவிதியான போது தாமரைக்கை நிகழ்ந்த போதும் பரிவலம் வந்த போதும் பார் பார் மகள் அடைந்த அன்றே இறைவனுடைய ஞானத்தை பெறுகின்ற பொருட்டு இந்த உலகில் உள்ள மக்கள் அனைவரும் தன்னிலை உணர்ந்து ஞானம் வெளிப்படுகின்ற போது உனக்கு அந்த நிலையானது கை கூடும் என்பதையும், உன் விதியாதனால் ஊறிய அமிர்தம் தன்னால் என்விதி தன்னால் வந்த இகபரம் உனக்குள்ளாகி அதாவது யார் யாரெல்லாம் கொண்டையமுது உண்ணும் நிலைக்கு உயர்த்தப்பட்டு வருகிறார்களோ அவர்களை எல்லாம் இரட்சித்து பாதுகாத்து அவர்களுக்கு தர்மயுக வாழ்வை அளிக்க வேண்டும் என்பதற்காகவும் அனைத்து மக்களையும் தன்னுடைய இறை சக்தியால் ஐக்கிய படுத்தி மக்களுக்கு ஞான அமுதத்தை ஊட்டுகின்ற விதமாக ஆன்ம ஒளி ஞானம் எப்போது பெற்று வருகின்றார்களோ அப்போது தர்ம யுக வாழ்வாகிய மீண்டும் பிறவா நிலை அருளுவேன் என்பதாகும்.

கலி பூமிக்குள் பிறப்பெடுத்த ஜீவாத்மாக்கள் முன் செய்த தவ பயனால் இகபர சக்திகளெல்லாம் ஒன்றிணைந்து உருவான ஞானசாரியாராகிய உனது அளப்பெரிய கருணையினால் பிறந்து உடலும் உயிர்கள் எல்லாம் மனம் சித்தம் புத்தி அகங்காரம்

என்று நான்கு திரையை மறைப்புகளில் இருந்து விடுபட்டு ஆன்ம தரிசனத்தினால் ஞானபாலாகிய அருள் உடலெல்லாம் பரவ செய்கின்ற போது தேகமானது பொன்னிறமாக மாறும். அவ்வாறு பொன்னொளியானபோது அவர்களுக்கு ரத்தினகிரீடம் என்ற பிறவாத நிலை அருளப்படும் என்று கூறுகின்றார்.

## Chapter 6
## சான்றோர் பக்தி

நடை

மகனே யுனக்கு மகாசெல்வ மாகிவரும்
சுகமேபோ யிரெனவே சொல்லி யனுப்பலுற்றார்
அனுப்பத் திருமால் அமைமக வேதுரைக்கும்
மனுப்புகழப் பெற்ற வைகுண்ட மேதுரைக்கும்
பாவி வெறுநீசன் பண்ணிவைத்த பாட்டையெல்லாம்
ஆவியறிந் தென்னுடைய அங்கமெல்லாஞ் சோருதையா
என்று வைகுண்டர் இசையத் திருமாலும்
அன்று மகனுக்கு அருளினது கேள்மாதே
இந்நீசன் நமக்கு இந்த யுகம்வரையும்
மன்னீதங் கெட்ட மாற்றானாய் வந்ததினால்
செய்தா னதினால் திருமகனே யஞ்சாதே
மைதான மான வாக்குநமக் காச்சுதெனக்
கைவாய்த்து தென்மகனே கலிநீச னையறுக்க
மெய்வாய்த்து நம்முடைய மேன்மைக் குலத்தோர்க்கு
அன்பான் சீமை அரசாள நாளாச்சு
தன்பா லடைய சரியாச்சு தென்மகனே
மலங்காதே போநீ வாழுகின்ற நற்பதியில்
கலங்காதே போயிருநீ கண்ணே திருமகனே
என்று விடையருள ஏற்ற திருமாலும்
அன்றுதிரு மாலும் அன்பாய் விடைவேண்டி
அலைவாய்க் கரையில் ஆதி வருகுமுன்னே
நிலையான சான்றோர் நிரம்பவந்து கூடினரே
கண்டந்தச் சான்றோரைக் கரியமா லுமகிழ்ந்து
நன்றென்று சொல்லி நாராயணர் கூட்டிப்
பண்டிருந்த நல்லப் பதியில்வந்து சேர்ந்தனரே
கண்டெந்தப் பேரும் கனபிரிய மாய்மகிழ்ந்து
தாமோ தரனார் தலத்தில் மிகச்சேர்ந்து
நாமோ முனிகூட நாடி மிகஇருந்தார்
இருந்து மிகப்பாலும் ஏற்றநல்ல பச்சரிசி
திருந்து சிறுமணியும் தேங்காய்ப்பூ தன்னுடனே
கொல்ல மிளகு கூண்டப் பொடியுடனே
நல்லாக இவ்வகைகள் நாடியொரு நேரமதாய்

காவி மிகப்புரிந்து கனத்திருத்தி ராட்சமிட்டுத்
தாவமுடன் மாத்திரைக்கோல் தானிதுவோ டேயிருந்தார்
கொஞ்சநாள் கழித்துக் கூண்டதிவ சம்பார்த்துப்
பஞ்சகரு ணாதிகளைப் பண்பாகத் தானிறுத்திக்
கந்தை மிகச்சூடிக் காவித்தொட்டில் மீதிருந்து
விந்தை யுடனுகத்து விவரிப்பெல் லாமெடுத்துக்
கூறினா ரந்தக் கூண்டரியக் காரணத்தை
பேறிருக்கும் நல்லோர் பெரிய பெருமானும்
நாடழியப் போறதுவும் நன்னாடு தோன்றுவதும்
பாடழிய நீசன் படப்போற செய்தியதும்
நல்ல மனுவோர் நாடி முழிப்பதுவும்
வல்லபுவி தர்மம் வாழ்வதுவுஞ் சிறப்பும்
சொல்லி விரித்தார் சிறந்ததொட்டில் மீதிருந்து
எல்லோருங் கேட்டு இப்போதோர் காரணந்தான்
நடத்துகிறா ரென்று நல்லோர்கள் சொல்லிடுவார்
சடத்தமுள்ள நீசச் சண்டாளப் பாவியெல்லாம்
காசு மிகவேண்டக் கபடுசெய்கி றானெனவே
பேசி யிவனும் பிதற்றுகிறா னென்றுசொல்லி
நகைப்பார் சிரிப்பார் நன்றிகெட்ட நீசர்குலம்
சிகப்பா னதுவால் தெய்வகுலச் சான்றோர்கள்
கூடிக் குவித்து குணமாக வேகூடித்
தேடிவைத்த பண்டம் சுவாமி தனக்கெனவே
நம்முடைய சஞ்சலங்கள் நாடும்பிணி தீர்த்தவர்க்குத்
தம்முடைய பாலு தாங்கொடுக்க வேணுமென்று
பசுவைக் கொடுப்பார் பாலாடு தான்கொடுப்பார்
கசுவிரக்க மாகக் காசு பணங்கொடுப்பார்
கஸ்தி மிகத்தீர்த்த காயாம்பு வண்ணரென்று
வஸ்திரங் கொடுப்பார் வழங்கு மிலைகொடுப்பார்
நெல்லு சிறுமணிகள் நெய்த்தேங் காய்கனிகள்
நல்லமைப்புச் சான்றோர் நாடி மிகக்கொடுத்தார்

விளக்கம்:

முட்டப் பதியிலிருந்து விஞ்சை பெற்று வைகுண்டரை பாற்கடலை விட்டு அனுப்புகின்ற போது வைகுண்டரிடம் மகனே உனக்கு மகா செல்வம் ஆகி வரும் சுகமாக நீ போய் வா என்று நாராயணமூர்த்தி அனுப்பி வைத்தார். அப்போது நாராயணரை அடிபணிந்து வைகுண்ட சுவாமி அவருடைய பாதம் பணிந்து, பாவியாகிய அந்த கலிநீசன் என்னை துன்புறுத்தியது எல்லாம் அறிந்து என்னுடைய அங்கம் எல்லாம் சோருதய்யா என்று வைகுண்ட சுவாமி நாராயணரிடம் கூறினார்.

அப்போது நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் இந்த யுகம் வரையும் அந்நீதம் கெட்ட இந்த கலிநீசன் மாத்தானாய் வந்ததினால் இவன் இந்த துன்பங்களயெல்லாம் செய்திருக்கிறான். இப்போது கலி நீசனை அறுப்பதற்காக எல்லாவித தன்மைகளும் நமக்கு கை வாய்ந்திருக்கின்றது. மெய் வாய்த்து நம்முடைய மேன்மை

குலத்தோர்களுக்கு எல்லாம் அன்பான சீமை அரசாள்வதற்கான நாள் நெருங்கிவிட்டது. மேலும் எல்லோரும் தன்னை உணர்ந்து இறைநிலை அடைவதற்குரிய நாள் நெருங்கி வந்துவிட்டது.

ஆகவே மலங்காதே போயிரு நீ வாழுகின்ற நற்பதியில் கலங்காதே போயிரு நீ கண்ணே திருமகனே என்று விடை அருளினார். அவ்வாறு தந்தையினிடம் விடை வேண்டிக்கொண்டு அலைவாய் கரையிலே வைகுண்டர் வருகின்றபோது சான்றோர் மக்கள் எல்லோரும் வந்து கூடி வைகுண்டரை சூழ்ந்து வணங்கி நின்றார்கள். மேலும் வைகுண்டரை அழைத்துக் கொண்டு தெட்சணமாகிய ஆகிய சாமிதோப்பு பதியில் வந்து சேர்ந்தனர். அவ்வாறு அங்கு வந்து எல்லோரும் கூடி சான்றோர் மக்கள் ஐயாவிற்கு கொடுப்பதற்காக பச்சரிசி சிறுமணியும் தேங்காய் பூ மற்றும் கொல்ல மிளகு கூண்ட பொடியும் சேர்த்து பால் அன்னம் சமைத்து வைகுண்டருக் கொடுத்து சிறப்பித்தார்கள். அவ்வாறு இருக்கின்ற போது வைகுண்டசுவாமி காவி மிகப் புனைந்து கழுத்தில் ருத்ராட்சம் இட்டு கையில் மாத்திரை கோல் பிடித்து பஞ்சகர்னாதிகளை எல்லாம் பண்பாகத்தான் நிறுத்தி காவித் தொட்டிலில் மீது இருந்து விந்தையாக உலக நடப்புகளை எல்லாம் அங்கே விவரித்து எடுத்துரைத்தார். எப்படி என்றால் இந்த கலியுகம் அழிய போகக்கூடிய விஷயங்களையும் நல்ல நாடாகிய தர்மயுகம் தோன்றுவதையும் மக்கள் எல்லோரும் அறிந்து கொள்ளும் படியாக சொல்லி விவரித்தார்.

மேலும் கலி நீசன் எவ்வாறு எல்லாம் அழியப்போகிறதா என்ற செய்தியையும், ஆன்ம விழிப்பும் பெற்று நல்ல மக்கள் எல்லாம் நாடி முழிக்கின்ற செய்தியையும், தர்மயுகம் தோன்றுகின்ற அந்த செய்தியையும் தொட்டிலிலிருந்து அங்கே மக்கள் எல்லோரும் அறியும் படியாக எடுத்துக் கூறினார். அவ்வாறு எடுத்துக் கூறுகின்ற அந்த நேரத்திலே அந்த சண்டாள பாவிகள் எல்லாம் காசு மிக வேண்டுவதற்காக கபடு செய்கிறான் என்று சொல்லி பழித்து பேசி பேயன் பைத்தியக்கார ன் என்று கூறி நகைத்தார்கள்.

ஆனால் தெய்வக்குல சான்றோர் மக்கள் எல்லாம் தேடி வைத்த செல்வம் எல்லாம் சுவாமி தனக்கெனவே கொண்டு கொடுத்தார்கள். மேலும் இப்போது நம்முடைய சஞ்சல நோய் பிணிகளைத் தீர்ப்பதற்காகவே அவர் இவ்வாறு எடுத்துக் கூறுகின்றார் என்பதை அறிந்து ஐயாவிற்காக வேண்டி பசுவை கொடுப்பார்கள் பாலாடு தான் கொடுப்பார்கள் கசுவிரக்கமான காசு பணங்கள் எல்லாம் கொடுத்தார்கள். வஸ்திரங்கள் மிக கொடுத்தார்கள். மேலும் வழங்கும் இலை கொடுத்தார்கள்.

இந்த காயாம்பு வண்ணராகிய வைகுண்டரே வஸ்துகளை எல்லாம் நமக்கு தேடித்தந்தவர் என்று எல்லாவிதமான செல்வங்களையும் ஐயாவிற்காக கொண்டு கொடுத்தார்கள். மேலும் நெல்லும் சிறுமணியும் நெய் தேங்காய் காய் கனிகளும் நல்ல உள்ளம் கொண்ட சான்றோர்கள் ஐயாவிடம் கொண்டு கொடுத்தார்கள். சான்றோர் மக்கள் அன்பாக கொடுத்ததை எல்லாம் அன்பாக பெற்று கொண்ட வைகுண்டர் அவற்றை பெற்று தன்னுடைய அருகிலே நின்ற மக்களாகிய சான்றோர்களை அழைத்து பரிந்து மிக ஈன்று இதை தர்மமாக செய்யுங்கள் என்றுக் கட்டளையிட்டார்.

இவ்வாறாக சான்றோர் மக்கள் அன்புடன் கொண்டு வந்த பொருட்களை எல்லாம் தர்மம் செய்ய வேண்டும் என்று பணிவிடையாளர்களிடம் ஐயா சொல்ல அதன்படி அந்த தர்மமானது எல்லோருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. பணிவிடை செய்பவர்களுக்கு ஐயா பரிந்து மிகக் கொடுத்தார்.

“சலியாமல் காசு தந்தவர்கள் உண்டானால் வேண்டி நீ தர்மம் விரைவாய் நடத்தி இரு என்ற விஞ்சையின் படி அதை அன்போடு ஏற்று அருகில் என்ன தொண்டர்களுக்கு பரிவுடன் அதை பகிர்ந்து கொடுத்தார்.

## Chapter 7
## சத்தகன்னிமார் வருகை

கொடுக்க அன்பரெல்லாம் குணமாய் மிகவேண்டி
அடுக்க அவரருகில் அன்பாக நின்வரில்
பணிவிடைகள் செய்வோர்க்குப் பரிந்து மிகஈந்தார்
மணியாம் பரனும் மகிழ்ந்துபா லேற்றனரே
ஏற்று உகத்துக்கு உகத்தீர்ப் பும்புரிந்து
சாற்று மொழிகூறித் தானிருக்கு மப்பொழுது
மாயத் திருமால் மால்வேச மேயெடுத்துத்
தேயமதில் நம்முடைய தெய்வகுல மாதர்களை
வருவிக்க வென்று மாஞால வித்தையினால்
உருவிக்க வென்று உலகநரு னானதிலே
தாக்கி உடலுள் தமனிய மாய்ப்பொதிந்து
நோக்கு முறைகாண்டம் நேர்மை மொழிமொழிந்து
பெண்ணாண் வரைக்கும் பெருங்கிழவி தான்வரைக்கும்
கண்ணா னமதலை கைக்குழந்தை முதலாய்ப்
பாட்டு வித்தேசம் படிப்புவித் தேசமுதல்
ஆட்டுவித் தேசம் ஆட்டி மிகவருத்தி
முன்னமைத்த பெண்ணை எல்லா மிகப்பார்த்துச்
சொன்ன முறைபோல் சிணம்செய்ய லாமெனவே
இட்ட ரொருசூட்சம் ஈசர்முத லெல்லோரும்
மட்டாரும் சூட்சம் வையகத்தி லேயாவி
சாதிபதி னெட்டும் ஆராட்டுப் பார்த்தனரே
ஆதிச்சா திதனிலே அமைப்புபோ லுள்ளவர்கள்
தானிறைந் தாடித் தண்மை மிகக்கூறி
வானிறைச் சோதி மயமாய்க் குதித்தனரே
இப்படியே சான்றோரில் ஏற்றபெண் ணாண்வரையும்
அப்படியே நன்றாய் ஆராதனை யாகி
ஊருக்கூ ரேயிருந்து உற்ற நருட்களெல்லாம்
பாருகங் காணப் பண்பாகக் கொண்டாடி
உமைபார் வதியெனவும் உற்றமுத் தாரெனவும்
இமையோர் புகழும் இலட்சுமி நானெனவும்
சத்திகன்னி மாதரென்றும் தார்குழலார் தோழியென்றும்
பத்தியுள்ள நல்ல பரமே சொரியெனவும்
மண்டைக்காட் டாளெனவும் மாதுநல்லாள் தோழியென்றும்
பண்டையுள்ள ஈசொரியாள் பாக்கிய வாட்டியென்றும்
வள்ளிதெய் வானை வாய்த்தபக வதியெனவும்
பூம டந்தையென்றும் பெரிய பிராட்டியென்றும்
பார்ம டந்தையென்றும் பத்திரமா காளியென்றும்
நாகக் கன்னியென்றும் நல்லதெய்வக் கன்னியென்றும்

பாகைக் கைகாட்டும் பைங்கிளிமார் நாங்களென்றும்
இப்படியே நல்ல ஏந்திழைமா ரெல்லோரும்
அப்படியே நல்ல அவனிப்பெண் ணார்பேரில்
ஆரா தனையாய் அங்கங்கு தான்கூடி
சீராகக் கூடிச் சேர்ந்துவரு வார்தினமே
ஆண்பிள்ளை கள்பேரில் ஆனசிவன் மாலெனவும்
நான்பிரமா வென்றும் நல்ல அனுமனென்றும்
காலனென்றும் ஏமனென்றும் கடியபெலக் கந்தனென்றும்
மாலவனின் மக்களென்றும் மாமுனிமார் நாங்களென்றும்
தேவ ரிஷியெனவும் சிமிள்கருட சேவனென்றும்
தாவமுள்ள நல்ல சன்னாசி மார்களென்றும்
ஆரா தனையாய் அவர்கள் மிகஆடிச்
சீராகக் காண்டம் செப்பிமிகப் படிப்பார்
வருவார் தினமே மாயோனிட மதிலே
கருவா யுதித்த காண்டம் மிகப்படிப்பார்
இப்படியே பெண்ணாணும் யாம முறைப்படியே
அப்படியே வந்து ஆடி மிகப்படிக்க
நல்லநா ராயணரும் நாட்ட மிகஅறிந்து
வல்லப் பொருளும் மனது ளறிந்திருப்பார்
அறிந்து சிலநாள் அகமகிழ்ந்து தான்பார்த்துச்
செறிந்த குணநாதன் தேதி கணக்கதிலே
இகனை நடத்த எண்ணமுற்றி ருக்கையிலே
உவமை பலசொல்லி உற்றதெய்வக் கன்னியர்கள்
அனைவோ ரும்புகழும் அரன்கயிலை வாழ்ந்ததுவும்
சுனையாடப் போனதுவும் தூயோ னடத்தினதும்
பிள்ளைதனைப் பெற்றதுவும் பெருவனத்தில் சென்றதுவும்
வள்ளல் சிவனை வருந்தித் தவம்புரிந்து
உலகில்மிகத் தோன்றும் உள்ளவர்த்த மானமெல்லாம்
சிலைநுதலிக் கன்னி சொல்லி மிகப்படிப்பார்
வனதேவதைகள் வந்துமாறி அடித்ததுவும்
இனமினமாய்ச் சொல்லி ஏழுகன்னியும் படிப்பார்
அப்போ திருமால் அடக்கி மிகமனதில்
செப்புவ தெல்லாம் சிந்தைதனில் கொண்டிருந்தார்
உமைமண்டைக் காட்டாள் உற்ற பகவதியாள்
இமையோர் புகழும் ஏற்றகுல பார்பதியாள்
சீதை மடந்தை சேயிழைமா ரெல்லோரும்
மாதவனை நோக்கி வளங்கூறி யேபடிப்பார்
பாவிக் கலியன் பழிநீசன் தோன்றினதால்
மேவிக் கலியில் மிகமூழ்கி மாயமதால்
பாயக்கலியை பரிந்தளைக்கும் நாளையிலே
மாயக் கலியை வதைக்குமந்த நாளையிலே
நீசக்கலியன் நிர்ணயத்தையும் கெடுத்து

தேசமதி லெங்களையும் திருக்கல்யாண முகித்து
எங்களுட நாயகனார் இங்குவரு வோமெனவும்
எங்களையு மிங்கே இக்கோல மாய்வரவே
சொல்லி யயைச்ச சுவாமிநீர் வந்தீரோ
பல்லுயிரும் பணியும் பரமனேநீர் வந்தீரோ
என்று மடவார் இப்படி யேயிசையப்
பண்டு முறைபோல் பிரப்பிரம மாயிருக்கும்
எண்ணித் திருமால் இருதயத்தி லேயடக்கி
மண்ணி லுள்ளோர்கள் வந்துமிகக் கூடிநிற்க
மேலோகத் தார்கள் இறைஞ்சிமிகப் பார்த்துநிற்கப்
பூலோக மெல்லாம் புதுமையெனப் பார்த்துநிற்க
அப்போது மாயாதி ஆகமத் தின்படியே
செப்போடு வொத்த தேசத் திருப்பதியில்
வாழுகின்ற தேவரையும் வாகாய் வரவழைத்து
நாளுக்கு நான்சொன்ன ஞாய முறைப்படியே
நடத்தாம லிப்போ ஞாயமீறி நீங்கள்
அடத்தமாய்ச் செய்வதென்ன எல்லோருஞ் சொல்லுமென்றார்
உடனே யெல்லோரும் உள்ள மிகத்தளர்ந்து
திடமே குளறிச் சொல்லவா யில்லாமல்
புத்தி மயங்கிப் பொறியழிந்து தேவரெல்லாம்
சத்திகெட்டார் போலே தானே விறுவிறுத்து
நின்ற நிலையை நெடியதிரு மாலறிந்து
குன்றுதனில் கொண்டு கொழுவிலங்கில் தான்சேர்த்து
மன்று ஒருகுடைக்குள் வைகுண்டம் ஆளவரும்
இன்றுமுதல் லக்குவரை இருங்கோ பாராவதிலே
வைத்தாரே நல்ல வடவா முகமதிலே
செய்த்தான் விதியெனவே தேவரெல்லா மிருந்தார்
அந்த அவதாரம் அதிக முடனடத்திச்
சந்தான மான சப்தகன்னி மாரையினி
மாமணங்கள் செய்து மாதரேழு பேர்களுக்கும்
தாமதங்க ளின்றி சந்ததிகள் தாங்கொடுத்து
இராச்சிய முங்கொடுத்து ஏற்றபவி சுங்கொடுத்) து (
இராச்சிய மாளச் செய்யவே ணுமெனவே
நினைத்துத் திருமால் நின்றிதயத் தேயடக்கித்
சினத்துதிருமால் திருவேசம் அமைப்பதற்கு
தனத்தனங்கள் பாடித் தந்தனங்கள் போடலுற்றார்
தினத்தினங்கள் பாடித் திருவேடம் போடலுற்றார்

விருத்தம்

முன்னே குருநா டைவருக்கு மீண்டு கொடுத்து மிகக்கலியால்
பொன்னோர் மானா யுருவெடுத்துப் பொருப்பே யேறி முனிகையினால்
சென்றோங் கூடு மிகப்போட்டு ஸ்ரீரங்க மேகச் செல்வழியில்

மின்னா ரிவர்க ளேழ்வரையும் மேவிப் புணர்ந்தோ மவ்வனத்தில்

விருத்தம்

வனத்தில் புணர்ந்து மாதர்களை மக்க ளேழும் பெறவருளிப்
புனத்தில் காளி தனைவருத்திப் பிள்ளை யேழு மிகாஈந்து
இனத்தில் பிரிந்த மானதுபோல் இவர்க ளேழு மடவாரை
வனத்தில் தவசு மிகப்புரிய மனதைக் கொடுத்து மீண்டோமே

விருத்தம்

மீண்டோங் கயிலைக் கிருந்துபின்னும் மெல்லி யிவர்கள் தவம்பார்க்க
ஆண்டோர் சிவனா ருமையாளும் யாமுந் தவத்துக் கருள்புரிந்து
சான்றோரிடமே பிறவிசெய் தரணி தனிலே நாம்வருவோம்
என்றே விடைகள் கொடுத்தயைச்ச இளமா மாதர் வந்தனரே

விளக்கம்:

அப்படி மக்கள் தர்மம் செய்து இருக்கின்ற அந்த வேளையிலே நாராயண மூர்த்தி மனதிலே ஒரு எண்ணம் கொண்டார். இனி தெய்வ குலமாதர்களை இங்கு வரவழைக்க வேண்டும் அவர்களுக்கு நல்ல சிறப்பு இயல்புகளை எல்லாம் அளிக்க வேண்டும் என்பதற்காக வேண்டி மனதிலே நினைத்தார்.

அதன்படி ஆங்காங்கே உள்ள மனுநருட்களின் உடலில் அந்த தெய்வமாதர்களை தாக்கி ஆட வைத்தார். பெண்களும் ஆண்களும், வயதான கிழவிகளும் குழந்தைகளும் ஆடிப்பாடி மகிழ்ந்த வண்ணம் தோப்பு பதி நோக்கி வந்தனர். தாம் பெற்று வந்த விஞ்சையின் படி முன் அமைந்த பெண்ணை எல்லாம் அதாவது எல்லாதிருவருள் சக்திகளையும் தம்மோடு ஐக்கியப் படுத்திக் கொண்டு தாம் தான் எல்லாமாக இருக்கிறோம் என்று இவ்வுலகத்திற்கு காட்ட திருவுளம் கொண்டு ஈசர் முதல் எல்லோரும் ஒரு திருக் கூட்டமாய் சமைந்து ஒரு மாபெரும் சக்தியாகப் பொலிந்து நின்றார்கள்.

சாதி பதினெட்டும் சாதி பேதம் இன்றி அக உணர்வு பெற்று ஆனந்தக் கூத்தாடினர். ஆங்காங்கே உள்ள பெண்கள் ஆராதனயாகி உமை பார்வதி, முத்தாரம்மன், லட்சுமி, சப்த கன்னி, அம்மாதர்களின் தோழிகள், பரமேஸ்வரி, மண்டைகாட்டாள், மண்டைக்காட்டாள் தோழி, ஈஸ்வரியாள், வள்ளி, தெய்வானை, பகவதியாள், பூமடந்தை, பெரிய பிராட்டி,பத்திரமாகாளி, நாகக்கன்னி, நல்ல தெய்வ கன்னி, என்று தங்களை கூறிக்கொண்டு வந்து சுவாமியை சூழ்ந்து நின்று ஆடி பாடி மகிழ்ந்தனர்.

ஆண் பிள்ளைகள் சிவன், மால், பிரம்மா, கந்தன், அனுமன், காலன், மால்மக்கள், மாமுனிமார், தேவ ரிஷிகள், கருடாழ்வார் மற்றும் சன்னியாசிமார், சிமிழ் கருட தேவன் எனக் கூறிக்கொண்டு தாங்கள் யார்? ஏன் இங்கு வந்தோம் என்பனவற்றை எல்லாம் மக்கள் அறியும் படியாக கருவாய் உதித்து காண்டம் படித்தனர். நல்ல நாராயணரும் அவர்களின் நாட்டம் அறிந்து குறித்த தேதிக் கணக்கில் இகனை நடத்த எண்ணமுற்று இருந்தார்.

அவ்வாறு இருக்கின்ற போது சப்தமார்கள், தாங்கள் அனைவரும் புகழும் அரண் கையிலையில் வாழ்ந்ததுவும், சுனையாட போனதும் நாராயணமூர்த்தி யின் திருவிளையாடலால் பிள்ளைகளைப் பெற்றதுவும், வனத்தில் சென்று சிவனை நோக்கி

வருந்தி தவம் புரிந்த செய்திகளையும், தவத்தின் பயனால் உலகில் தோன்றி வந்ததுவுமாகியச் செய்திகளை எல்லாம் ஒளிமயமான தூய்மையே உருவான அந்த சப்தமாதர்கள் சொல்லி காண்டம் படித்தார்கள். அத்தனையும் மனதில் அறிந்த வண்ணம் ஐயா வைகுண்ட அமைதியாக இருந்தார்.

அதேபோன்று தெய்வ கன்னியர்களானவர்கள் உமையாள் என்றும் மண்டைக் காட்டாள், பகவதியாள், பார்வதியாள், சீதை மடந்தை சேயிளைமார் அனைவரும் மாதவனை நோக்கி இங்கு வந்த செய்திகளைச் சொல்லிக் காண்டம் படித்தார்கள். பாவிகலியனுடைய மாயையினால் தேசமெல்லாம் இருள் மூடி போனதால் அந்த மாயக் கலியை வதைத்து மக்களுக்கு நற்பேறு அருளும் காலத்தில் தேசமதில் எங்களையும் திருக்கல்யாணம் முடிக்க எங்களுடைய நாயகனார் இங்கு வருவோம் என்று கூறி எங்களையும் இக்கோலமதாய் இங்கு வரவழைத்த சுவாமி நீர் வந்தீரோ! பல்லுயிரும் பணியும் பரமனே நீர் வந்தீரோ! என்றுக் காண்டம் படித்தனர்.

அதாவது கலி முடியும் காலத்தில், கலிமாய்கையில் இருந்து விடுபட்ட உயிர்களை பேணும் பெண்மை அழகு பொருந்தி நிற்கும் ஜீவாத்மாக்களை எல்லாம் பரமாத்மாவோடு ஐக்கியமாகி பேரானந்தத்தில் திளைத்து இருக்க வைப்பார் என்பதாகும்.

இவைகளை எல்லாம் கேட்டு இதயத்திலே அடக்கிய வேத வாக்கியங்களால் போற்றப்பட்ட சொல்லால் பெரிய திருமால் பண்டு முறை போல் பரபிரம்மமாக இருந்தார். பிரபஞ்ச உற்பத்தி காலத்திற்கு முன் ஏகம் ஒரு பரமாக இருந்தார். பின் உலக இயக்கத்தின் பொருட்டு பரப்பிரம்மத்தில் இருந்து இறைச்சக்திகள் பல நாமங்களோடு பிரிந்து உலக மக்களால் வணங்கப்பட்டு வந்து இன்றளவும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இப்போது அனைத்து திருவருள் சக்திகளும் பரப்பிரம்மத்திற்குள் ஒடுங்க வேண்டும் என்பதே இதனால் உணர்த்தப்படுகின்றது. மேலோகத்தார்களெல்லாம் இறைஞ்சி தொழுது நிற்க பூலோகம் எல்லாம் புதுமை என பார்த்து நிற்க மாயாதி சூட்சன் செப்போடு ஒத்த தேச திருப்பதியில் தன் ஞான உபதேசங்களை கை கொள்ளாத தேவதைகளை எல்லாம் வரவழைத்தார். அதாவது மக்கள் காணும் படி தகுதியுள்ள மனு உடலில் தாக்கி ஆட வைத்தார். இவைகள் எல்லாம் சுவாமி மன்னகம் வந்ததும் உபதேசித்த ஞான உபதேசங்களுக்கு புறம்பாக நடந்த தேவதைகள். எனவேதான் இவற்றையெல்லாம் அழைத்து நீங்கள் நியாயம் மீறி அடாவடித்தனமாக நடந்த காரணங்களை எல்லாம் சொல்லுங்கள் என்றுக் கேட்க அவைகள் சொல்ல வாய் இல்லாமல் புத்தி மயங்கி பொறியழிந்து, சக்திக் கெட்டுப் போய் நின்றன.

அவைகள் இருந்த நிலையை அறிந்த நெடிய திருமால் அவைகளை,
குன்றுதனில் கொண்டு கொழு விலங்கில் தான் சேர்த்து மன்று ஒரு குடைக்குள் வைகுண்டம் ஆள் வரைக்கும் இன்று முதல் லக்கு வரை இருங்கோ பாராவதிலே வைத்தாரே நல்ல வடவா முகமதிலே செய்த்தான் விதி எனவே தேவர்கள் அனைவரும் இருந்தார்கள்.
அதாவது அவைகளை எல்லாம் கயிலையங்கிரியில் கொண்டு சென்று ஆதிவைகுண்டர் கலியை அழத்து நல்ல மக்களை தேர்ந்தெடுத்து தர்மபுரியில் வைத்து ஒரு மொழிக்குள் ஆள வைகுண்டம் வரும்வரையிலும் வடவா அக்கினி முகத்தில் இருங்கள் என்று ஞானச்சிறை வைத்தார்.

அடுத்து சப்தமாதர்களை மாமணங்கள் செய்து பேரானந்தம் அருளி அவர்களின் பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் கொடுத்து தர்மபுவியில் வைத்து ஆளத்திருவுளம் கொண்டார்.

## Chapter 8
## சான்றோர்கள் சப்தமாதர்களை அழைத்தல்

நடை

முற்பிறவி செய்த மொய்குழலார் வந்தாரென
நற்பிறவி கொண்ட நாரா யணர்மகிழ்ந்து
ஆடரம்பை மாரை அருமைமணஞ் சூட்டவென்று
வேடம திட்டார் வீரநா ராயணராய்
நாரா யணராய் நல்லதிரு வேடமிட்டுச்
சீரான காவிச் சீலை மிகப்புரிந்து
ஒருதோளில் பொக்கணமும் உத்திராட்ச மாலைகளும்
துரித முடன்சிரசில் துளசிமா லைபுனைந்து
கையிற் பிரம்பும் கனத்தசுரைக் கூடுடனே
மெய்யில் வெண்பதமும் உத்திராட்ச மாயணிந்து
வேலுமிகப்பிடித்து வேடமிகதரித்து
மாலு நிறமாய் வாய்த்ததொட்டில் மீதிருந்து
ஆகமத்தி லுள்ள அறிவுஞா னம்பேசிப்
பாகமதில் நிற்கும் பாலதியச் சான்றோரைப்
பார்த்து அருகழைத்துப் பச்சைமா லேதுரைப்பார்
நாற்றிசை யுமறிய நல்லகுலச் சான்றோரே
உங்களுட தாய்மார் உற்றகன்னி மார்களைநான்
எங்க ளுடவிதியால் இப்போமணஞ் சூட்டுதற்கு
விதிவந் திருக்குதுகாண் வேளையி தானதினால்
பெரியவுங்கள் தாய்மாரைப் பேயழைத்து வாருமென்றார்
நால்திசையும் நீங்கள் நடந்துமிக சத்தமிட்டு
மாலதியப் பெண்ணை வரவழைத்து வாருமென்றார்
சீரான நூல்முறைக்கு தேனெயெங்கள் தாய்மாரே
நாரா யணர்க்கு நல்லமணஞ் சூட்டுதற்கு
நாளான நாளிதுவாம் நன்னுதலே தாய்மாரே
தாழாமல் வாருமென்று சத்தமிட் டழையுமென்றார்
இப்படியே சொல்லி ஏற்றபுகழ்ச் சான்றோர்கள்
அப்படியே சொல்லி அழைத்தாரே சத்தமிட்டுப்
பாலருட சத்தம் பாவையர்கள் கேட்டுமிகச்
சீல முடனெழுந்து தெய்வமட மாதர்வந்தார்
வந்துமிக நாரணரை வாழ்த்தி மிகவணங்கி
சந்துஷ்டி யாகத் தங்கள்தங்கள் வாக்கில்நின்று
முன்முறைகள் சொல்லி மொழிந்துமிகப் படித்தார்
தென்பதிக ளான தெச்சணா பூமியிலே

நான்வந் திருந்து நானிலத் துள்ளவர்க்குத்
தீனம் பலதீர்த்து ஷ்ரீபண்டா ரமெனவே
நாம மிகக்கூறி நாட்டிலிருப் போமெனவே
தாமதமில்லாமல் தாமேபிறவிசெய்து
சொல்லி யெங்கள்தம்மைத் தொல்புவியில் வாருமென்று
நல்லவராய்ச் சான்றோருள் நாடிப் பிறவிசெய்தீர்
பிறந்து வளர்ந்து என்பேரு கேட்டவுடன்
மறந்திடா வண்ணம் வாருங்கோ என்றுசொல்லிப்
இங்குபிறவிசெய்த நாயகரே பெரியவரே வந்தீரோ
கங்கை திரட்டி கறைகண்டர் தன்சிரசில்
பெண்க ளேழுபேரும் பிரியமுடன் வாழ்ந்திருந்து
எங்கள்கற் பெல்லாம் ஈடழிய வேதுணிந்து
சங்கை யழித்த தலைவனேநீர் வந்தீரோ
எங்களுட பிள்ளை ஏழு மினவழியும்
அங்கங் குறையாமல் அவ்வழிகள் தாமுழுதும்
கொத்தோ டேசேர்த்துக் குடும்பத்தோ டேயடக்கிப்
பெற்றோர்க்கு எல்லாம் பெருவாழ்வு தான்வகுத்து
எங்களையுஞ் சேர்த்து இரட்சிய முமருளி
மங்களமாய் வாழ்வோமென்ற மாதவரே வந்தீரோ
இனியிப்போ தேழ்வரையும் ஏற்ற மணம்புரிந்து
வனிதவழு மாயவரே வைத்தாளு மென்றுசொல்லிப்
பாடியே மாமடவார் பாதம் பணிந்துநிற்க
நாடியே யெம்பெருமாள் நல்லதா கட்டெனவே
அருகில் மிகநிற்கும் அன்பான சான்றோரை
வருக அழைத்து வார்த்தைமிகக் கூறலுற்றார்
எந்தனக்கு முன்னமைத்த இளங்குழலா ரேழ்பேரும்
வந்தன ரேயிவர்கள் வளப்பமென்ன சொல்லுமென்றார்
கன்னிதானோ யிவர்கள் கள்ளிகளோ பாருமென்று
உன்னி மனதுள் உபாயமாய்த் தானுரைத்தார்
நடையுடைகள் பேச்சு நாரியர்கள் தங்குணங்கள்
மடமயிலின் சாடை மாதிரியைப் பாருமென்றார்
அப்போது சான்றோர் எல்லோரு மேமகிழ்ந்து
இப்போது எங்களுக்கு ஏதுந் தெரியாது
படைத்தவர்க் கேதெரியும் பாவையரின் தங்குணங்கள்
செடத்தமெல்லா மெங்களுக்குத் தெரியா தெனவுரைத்தார்
மாயவர் தான்பார்த்து மாதுகளைத் தாநோக்கித்
தூயவர் தான்வார்த்தைச் சொல்லுவார் பெண்களுடன்
நானெப்போ துங்களையும் நடுவனத்தில் கண்டதுதான்
தானெப்போ வந்தேன் தார்குழலே நானறியேன்
காட்டிலே வந்ததெப்போ கற்பை யழித்ததெப்போ
பேட்டிசெய்து பிள்ளை பெற்றதெப்போ நானறியேன்

ஒன்றுந் தெரியாது உங்களைநான் கண்டதில்லை
பெண்டுகளே யிப்பேச்சுப் பேசாதே போய்விடுங்கோ
மாயமாய் நீங்கள் மருட்டி விழியாதுங்கோ
பாயமா யுங்கள் பகட்டி லடங்கேனான்
பண்டாரத் தோடே பழிமொழிகள் பேசாதே
அண்டாது உங்கள்மொழி அகலநின்று போய்விடுங்கோ
என்று அடாத்தியமாய் இவர்தான் மிகமொழிந்தார்
நின்று நினைத்து நேரிழைமா ரெல்லோரும்
அடந்து மடவார் ஆகத்திரண் டேகூடித்
தொடர்ந்து நெருங்கித் தொட்டுப் பிடிக்கவென்று
தார்குழலில் மூத்த சாத்திரத்தா ளேதுரைப்பாள்
வாரணியுங் கூந்தல் மடவா ரென்தங்கையரே
கள்ளக் கவுலாய்க் கண்மாயஞ் செய்துஅன்று
மெள்ள நெகிழ்ந்த மெக்குவாய்த் தாதனையம்
சென்று பிடித்துச் செய்தியென்ன கேளுமென்று
மன்றுபுகழ் சாத்திரத்தாள் தங்கையரைக் கண்காட்ட
மடவார்க் ளெல்லாம் மாகோப மாய்வெகுண்டு
அடவாக மாயவரை அடர்ந்து பிடிக்கலுற்றார்

விருத்தம்

தேன்மொழி மாரே யென்றன் சித்திரத் தங்கை மாரே
கான்வன மதிலே நம்மைக் கைகலந் திழிவு செய்த
மான்முனி தன்னைக் கண்டோம் வார்த்தையில் குழைக்கார் சோற்றை
வான்முனி தன்னை நீங்கள் வளையுங்கோ சிணமே யென்றாள்

விருத்தம்

செப்பிட மூத்த கன்னி தேவிய ராறு பேரும்
அப்படி ஒன்று போலே அவர்வளைந் தாதி தன்னை
முப்படி யெங்கள் தம்மை மொய்வன மதிலே வந்து
கற்பினை இகழச் செய்தக் கள்வரே யென்று சூழ்ந்தார்

விருத்தம்

சூழ்ந்தே நமது துகிலைமுன்னம் சுழியஞ் செய்த மாமுனியைப்
பூந்தே நெருங்கித் துகிலுரியப் பிடித்தே யிழுத்து நாமீன்ற
சாந்தோர் மக்க ளேழ்வரையும் தரவே யென்ன செய்தியென்று
ஓர்ந்தே கேட்போ மென்றுசொல்லி ஒன்றுபோலே வளைய லுற்றார்

விருத்தம்

வளைந்த போது மாயவரும் மனது ளுபாய மொன்றெடுத்து
இளந்த மொழிகள் சொன்னாக்கால் இளப்ப மிதுவே யாகுமென்று
குழைந்த வார்த்தை மிகக்கூறி குழந்தை யேழு மினவழியும்
நுழைந்தே யெடுத்து நொடிப்பொழுதில் நேரேகொண்டு தாறோ மென்றார்

விளக்கம்:

துவாபரயுகத்தில் கண்ணனாக இருந்து பாரதப்போரை நடத்தி பஞ்சபாண்டவர்களுக்கு குருநாட்டை மீட்டுக்கொடுத்து தன்னுடைய அவதாரத்தை நிறைவு செய்யும்போது பருவதாமலைக்குச் சென்று அங்கே ஒரு மானாக வேடன் கண்ணிற்கு காட்சி கொடுத்து வேடன் கையால் அம்புபட்டு தன்னுடைய அவதாரத்தை நிறைவு செய்துவிட்டு தன்னுடைய உபாயமாய கூட்டை பருவதாமலையிலே போட்டுவிட்டு ஸ்ரீரங்கம் நோக்கி வழி நடந்தார்.

அவ்வாறு ஸ்ரீரங்கம் நோக்கி வழிநடக்கின்ற போதிலே வழியில் அரிகோணமாமலையில் இருந்த அயோக அமிர்த கங்கையில் நீராடி கொண்டிருந்த சப்தமாதர்களைக் கண்டு அவர்களிடம் நீங்கள் சிவபெருமானுக்கு செய்யும் தொண்டை இன்று ஒரு நாள் மட்டும் எனக்கு செய்யுங்கள் எனக்கேட்க அவர்கள் மறுத்தனர். அவர்களின் மன உறுதியை அறிந்து அவர்களின் மூலம் சான்றோர் மக்களை பெற்றெடுதேன்.

அந்த சான்றோர் மக்களை பத்திரமாகாளியிடம் வளர்ப்பதற்காகக் கொடுத்துவிட்டு, அந்த சப்த மாதர்களுக்கு தவம் செய்வதற்குரிய மனதையும் கொடுத்து தவத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அவ்விதம் பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்தனர். அதன் பின்னர் கயிலைக்கு சென்று சிவபெருமானிடம் அந்த சப்தமாதர்களுடைய தவத்தை பார்த்து அவர்களுக்கு அருள் புரிய வேண்டும் என்றுக் கேட்டு தவத்தை நிறைவேற்றி மீண்டும் சான்றோர் குலத்திலே அவர்களைப் பிறவிப் செய்து , மாதர்களே நீங்கள் சான்றோர் இடத்தில் வாழ்ந்து வாருங்கள். நான் வந்து உங்களை ஏற்று அருள் புரிவேன் என்று விடை கொடுத்து அனுப்பி வைத்த மாதர்கள் இப்போது வந்திருக்கிறார்கள் என்று எண்ணியவராக அவர்களை அருமை மணம் புரிய வேண்டும், அதாவது ஜீவ பிரம்ம ஐக்கியம் சூட்டுவதற்கு வீரநாராயணராக நாராயண மூர்த்தியாக மால் வேஷம் எடுத்தார்.

எவ்வாறென்றால் காவி உடையை உடுத்தி தோளில் போக்கணத்தை போட்டார். கழுத்தில் உத்திராட்ச மாலை அணிந்து கொண்டார். சிரசில் துளசி மாலையும் அணிந்து கையில் பிரம்பையும் எடுத்து சுரக் கூடை கையிலே தூக்கிக்கொண்டு மெய்யில் வெண்பதத்தை வித்தாரமாக அணிந்தார். வேலை கையில் மிகப் பிடித்து கொண்டு நாராயண மூர்த்தியாக வேடம் புனைந்து தொட்டிலில் அமர்ந்திருந்து ஆகமத்தில் உள்ள அறிவு ஞானங்களை எல்லாம் பேசிக் கொண்டு இருந்தார்.

அப்போது சான்றோர் மக்களை அழைத்து நீங்கள் நால் திசையிலும் சென்று எல்லோரும் அறியும்படியாக அழைத்து வாருங்கள். நல்ல குல சான்றோரை உங்களுடைய தாய்மார்களாகிய சப்தமார்களை நான் அருமை மனம் சூட்டுவதற்கான வேளை இப்போது வந்து இருக்கிறது. ஆனதினால் பெரிய உங்கள் தாய்மாரை நீங்கள் போய் அழைத்து வாருங்கள். நால் திசையும் நடந்து நீங்கள் சத்தமிட்டு மாலதிய பெண்ணை வரவழைத்து வாருங்கள் என்றார்.

மேலும் சப்த மாதர்களை எப்படி அழைக்க வேண்டும் என்றும் கூறினார். சீரான நூல் முறைக்கு தேனே எங்கள் தாய்மாரே நாராயணருக்கு நல்ல மணம் சூட்டுதற்கு நாள் வந்து இருக்கிறது. தாளாமல் வாருங்கள் என சப்தமிட்டு அழையுங்கள் என்றார். அம்மைமார்களிடம் சான்றோர்கள் வழியில் போய் பிறந்து இருங்கள் நான் உங்களை வந்து ஏற்றுக் கொள்வேன் என்றுச் சொல்லி இருந்தார்.

ஆனால் அவர்கள் எங்கு யார் யாருக்கு பிள்ளைகளாக பிறந்தனர் எந்த விவரம் சொல்லப்படவில்லை. வெள்ளை உள்ளம் அடைய சான்றோர்களிடம் நால் திசையும்

நீங்கள் நடந்து சத்தமிட்டு அழையுங்கள் என்றாரே தவிர இந்த இடத்தில் அவர்கள் இருக்கின்றார்கள் நீங்கள் போய் அழைத்து வாருங்கள் என்று கூறவில்லை.

இவ்வாறு சுவாமி சொல்லியபடி கள்ளம் கபடம் அற்ற வெள்ளை உள்ளத்துடன் வாழும் சான்றோர் மக்கள் சப்தமிட்டு அழைத்தார்கள். பாலர்களின் சத்தம் கேட்டதும் அந்த பாவையர்கள் உடனே எழுந்து வந்தார்கள். இவ்வாறு பாலர்கள் சத்தம் கேட்டு எழுந்தோடி வந்த அந்த பாவையர்கள் சுவாமியைக் கண்டு வாழ்த்தி வணங்கி தொழுது நின்றார்கள்.

அப்போது முன்முறைகளை எல்லாம் உலகோர் அறியும்படியாக கூறினார்கள். எப்படி என்றால் தென்பதிகளான தெட்சணா பூமியில் ஸ்ரீ பண்டாரம் என்னும் திருநாமத்துடன் எழுந்தருளி மக்களுக்கு நோய் பல தண்ணீர் மண்ணால் தீர்த்து நாட்டில் இருப்போம் வாருங்கள் என்று எங்களை சொல்லி அழைத்து சான்றோர்களில் பிறவி செய்து எங்களை அனுப்பி வைத்த நாயகரே பெரியவரே வந்தீரோ என்றுப் போற்றி நின்றார்கள்.

மேலும் கற்பின் வன்மையால் கங்கையை பந்து போல் கையில் திரட்டி சிவபெருமானுக்கு அபிசேகம் செய்து வந்தோம். ஆனால் அந்த கங்கையை திரளாமல் செய்து எங்கள் கற்பை எல்லாம் அழித்த தலைவரே நீர் வந்தீரோ! அது மட்டுமல்ல எங்களுடைய பிள்ளை ஏழு இன வழியும் அங்கம் குறையாமல் அவர்களை எங்களுக்கு தந்து கொத்தோடு சேர்த்து குடும்பத்தோட அடக்கி பெற்றோர்களுக்கு எல்லாம் பெருவாழ்வு தான் கொடுத்து எங்களை உங்களோடு சேர்த்து இராச்சியமும் அருளி மங்கலமாய் வாழ்வோம் என்று சொல்லிய மாதவரே வந்தீரோ! இனி இப்போது எங்களையும் ஏற்ற மணம் புரிந்து மக்களையும் எங்களையும் மங்களமாய் வைத்தாளும் அய்யாவே என ஐயாவின் திருபாதம் பணிந்தனர்.

இவ்வாறு அந்த மாமடவார்கள் சாமியின் திருப்பாதம் பணிந்து நிற்க, நாராயணமூர்த்தி அவர்களைச் சோதிக்கும் விதமாக , அருகில் நின்ற அன்பான சான்றோர்களை பார்த்து இவர்கள் யார்? எதற்காக இப்படி பேசுகிறார் கள். எனக்கு முன்னால் இருக்கும் இவர்கள் கன்னிகள் தானோ இல்லை கள்ளிகளோ பாருங்கள் என்று உன்னி மனதில் உபாயமாக தான் உரைத்தார் .

அதாவது அந்த தாய்மார்கள் யார்? ஏன் இந்த திருவிளையாடல் இவர் நடத்துகின்றார் என்பதை உலகோர் அறிந்து மகிழ்ந்து வரும் பொருட்டு தனிப்பெரும் கருணையால் இவ்வாறு உரைத்தார்.
உடனே அந்த சான்றோர் மக்கள் நடை உடைகள் பேச்சு நாரியரின் தன் குணங்கள் மடமயிலின் சாடை மாதிரியை எல்லாம் பாரும் என்று மக்களிடம் சொன்னவுடனே அவர்கள் ஐயாவிடம் படைத்தவருக்கே தெரியும் பாவையரின் நற்குணங்கள் எங்களுக்கு ஒன்றும் தெரியாது இவர்களை நாங்கள் இதுவரையிலும் பார்த்தது இல்லை யல்லவா என்று உரைத்தனர்.

உடனே சுவாமி அந்த தாய்மார்களை பார்த்து உங்களை நான் கண்டதில்லை நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு தெரியாது. நான் எப்போது உங்களை நடுவனத்தில் சந்தித்தேன் காட்டில் வந்ததெப்போ கற்பை அழித்தது எப்போ, பேட்டி செய்து பிள்ளை பெற்றதெப்போ நான் அறிய உங்களை நான் கண்டதில்லை பெண்டுகளே இந்த பேச்சு பேசாதீர்கள் மாயமா நீங்கள் மரட்டி விளையாடாதீர்கள் உங்கள் உபாயம் என்னிடத்தில் செல்லாது பண்டாரத்தோடு படிமொழிகள் பேசாது போய்விடுங்கள் என்றார். உடனே சாஸ்திரத்தாள் என்னும் மூத்த கன்னிதம் தங்கையரை பார்த்து கையில கவுசலமாய்

கைமாயம் செய்து எங்களுக்கு வெள்ளம் திரளாமல் வைத்த மெக்குவாய் தாதனையும் சென்று பிடித்து செய்தி என கேளுங்கள் என்று அங்கே கண்காட்டினார். உடனே கன்னியர்கள் அய்யாவை வளைந்து பிடித்தார்கள்.

கன்னியர்களில் மூத்த கன்னியான சாஸ்திரத்தாள் தன்னுடைய தங்கைமார்களிடம் தேன்மொழிமாரே எந்தன் சித்தரை தங்கைமாரே காட்டிலே வந்து நம்மை கை கலந்து இழிவு செய்து நம்முடைய கற்பை இழக செய்த மாமுனியை நாம் இப்போது கண்டுவிட்டோம். அவரிடம் நாம் குழந்தைகளை கேட்டால் அவர் அவருடைய பேச்சானது அங்கே மழுப்புவது போல் தெரிகின்றது ஆகவே நீங்கள் இப்போது எல்லோரும் வளைந்து அவரைப் பிடியுங்கள் என்றுக் கூறினாள்.

சாஸ்திரத்தாள் சொன்னவுடனே அந்த தங்கையர்களாகிய ஆறு பேரும் ஒன்று போல நாராயண மூர்த்தியை சூழ்ந்து கொண்டு எங்கள் தன்னை மொய்வனமதிலே வந்து எங்கள் கற்பினை இளக செய்த கள்வர் தங்கள் தானோ என்று அங்கே வளர்ந்து சூழ்ந்து கொண்டார்கள்.

சூழ்ந்த அந்த கன்னியர்கள் நாராயணமூர்த்தியிடம் எங்களுடைய துகிலை முன்னால் சுழியம் செய்த மாமுனியே என்று அய்யாவை சூழ்ந்து நெருங்கி எங்களுடைய பிள்ளைகளாகிய சான்றோர் மக்கள் ஏழுபேரையும் நீங்கள் தர வேண்டும். அதற்கு தாங்கள் என்ன சொல்லுகின்றீர்கள் என்று அங்கு அவர்கள் வளைந்து நின்று கேட்டார்கள்.

அப்போது நாராயணமூர்த்தி அவர்களை சந்தோஷப்படுத்துகின்ற விதமாக இப்போது இவர்கள் மனம் இளகும்படியான வார்த்தைகளை நாம் சொல்ல வேண்டும் என்று கூறி குழந்தைகளை உங்களுடைய முன்பு எடுத்து தருகிறேன் என்று அவர்கள் மனம் மகிழும் படியாக கூறினார் .

## Chapter 9
## சப்த கன்னியர்களின் வேண்டுதல்

தரு) பல்லவி (

பிள்ளையை நாம்தா றோம் – நீங்கள்பெற்ற
பிள்ளையை நாம்தா றோம்

அனுபல்லவி

பிள்ளையை நாம்தாறோம் கிள்ளை மடவாரே
கள்ள மொழியில்லை உள்ளதைச் சொல்லுகிறோம்) பிள்ளை (

சரணம்

காட்டு வனத்திலே கண்டுங்கள் தம்மையும்
லோட்டுகள் பார்த்துநீ ருடுகலை தோற்றதும்
மேட்டுக ளாயென்னை யெரிக்கத் துணிந்ததும்
பூட்டுகள் சொல்லாமல் பெண்ணேநீர் பெற்றிடும்) பிள்ளை (

அருவன மீதினி லமிர்தவாழ் கெங்கையில்
சொரூபமாய் நீங்கள் சுனையாடும் வேளையில்
வரும்வழி மீதுங்கள் வாய்மொழி மதங்கண்டு
கருவது கொண்டுநீர் காட்டினி லீன்றிடும்) பிள்ளை(

உறுவன மீதிலென் உபாயத்தை யறியாமல்
முறுவல்செய் தென்னைநீர் மொழிந்தது கண்டுநான்
இறுவான மேலோக எழுபுவி உயிரெனப்
பெறுகநான் செய்திடப் பேணியே நீர்பெற்றப்) பிள்ளை(

விருத்தம்

மடமயில் மாதே நீங்கள் வந்தென்னை நெருக்க வேண்டாம்
தொடவும்நீர் ஞாய மில்லை தூரவே யகல நின்று
அடவதில் பெற்ற பிள்ளைக்)கு (அடையாள மறியச் சொன்னால்
உடனிப்போ மதலை தந்து உலகமு மருள்வோ மென்றார்

விருத்தம்

அய்யனே குருவே யெங்கள் ஆதியே சோதி யான
மெய்யனே வொப்பில் லாத வேதநன் மணியே கேள்மோ
வெய்யநல் மதலை யீன்று வெட்கமு மிகவே யாகிக்
கையது தப்பி யோடக் கண்டமோ மதலை யென்றார்

சிந்து) பல்லவி(

மதலையைத் தாருமையா – நாங்கள் பெற்ற
மதலையைத் தாருமையா

அனுபல்லவி

மதலையைத் தாருமெங்கள் வயிறெல்லாங் கொதிக்குது
குதலைமொ ழிகள்கேட்டுக் கொஞ்சிக் குழைந்திருக்க) மதலை(
சரணம்

பெற்றநா ளின்றுவரைப் பிள்ளைதனைக் காணாமலே
மெத்தம னதுநொந்து மெய்யந்த ளருதையோ) மதலை(

வாலைப்ப ருவத்திலே வனத்தில்ம யக்கமிட்டுக்
கோலம ழித்தவேத கோலகால மாமுனியே) மதலை(

பாலர்பெற்ற நாள்முதலாய்ப் பன்னிரண்டு ஆண்டுவரைக்
காலதி ழகாமலே காட்டில்த வசிருந்தோம்) மதலை(

ஊணுஉ றக்கமில்லை ஒருவரின் தஞ்சமில்லை
மூணுநாலு காலம்வரை மூண்டத்த வசிருந்தோம்) மதலை (

சிங்கங்க ரடிபுலி திரியும்வ னத்தினூடே
நங்கைமா ரேழ்பேரும் நாடித்த வசிருந்தோம்) மதலை (

இத்தனைநா ளுந்தவ மிருந்துபின் னாங்களெல்லாம்
பெற்றன மனுவயிற்றில் பிறந்துவு தித்துவந்தோம்) மதலை (

முன்னிருந்த செல்வமென்ன மூதூர்சி றப்புமென்ன
மன்னுகந்த மாதுமையை மறந்துக லியில்வந்தோம்) மதலை (

ஆண்டச்சி றப்புமென்ன அருஞ்சுனை யாடலென்ன
காண்டம்நிறை வேறுதற்கோ கலியிலு தித்துவந்தோம்) மதலை (

உண்டிருந்த செல்வமென்ன உடுத்ததுகில் ஞாயமென்ன
கொண்டிருந்த விதிப்பயனோ கூறுகலி மீதில்வந்தோம்) மதலை (

பொன்னும்பந்தலாரமென்ன பூத்தொடுக்கும் சாரமென்ன
முன்னுரைத்து விட்டதுபோல் மூண்டகலி மிதில்வந்தோம்) மதலை (

பந்தடிக்கும்வீரமென்ன பைம்பொன்னிறமேடையென்ன
குந்தடிக்கமாவுலகில் குதித்துப் பிறந்துவந்தோம்) மதலை (

கன்னிய ழியுமன்னே காதல்தனைப் பெற்றதினால்
நின்னுபிள்ளைப் பாராமலே நெடுகந டந்துவிட்டோம்) மதலை (

கண்டுபிள்ளைத் தானெடுத்துக் கமலமுகத் தோடணைத்துப்
பெண்டேழும் பால்கொடாமல் பெருகவ னத்தில்சென்றோம்) மதலை (

பாலிளகி நல்லமிர்தம் பாலாய்ச்சொ ரியுதையோ
மாலழகா எங்களுட மனக்கவ லையைத்தீர்க்க) மதலை (

வர்ணநி றமதுவும் மக்களுட சாயலதும்
கண்ணதிலே கண்டறியோம் கையதிலே தாருமையா) மதலை (அங்கமெல்லாஞ்
சோருதையோ ஆவிமெத்த வாடுதையோ
தங்கமணி நாங்கள்பெற்ற தவமணியை எங்கள்கையில்) மதலை (

மங்காத தெய்வகுல மக்களேழு மேழ்வழியும்
சிங்கார மாகஇப்போ சீக்கிரம்நீர் தாருமையா) மதலை (

விருத்தம்

மதலையுந் தந்து எங்கள் மனச்சட வெல்லா மாற்றிக்
குதலைகள் தமக்கு இந்தக் குருமுடி சூட்டித் தர்மப்
பதியுக மதிலே யெங்கள் பார்முடி மன்ன ராக
நிதமிருந் தரசே யாள நின்மக்கள் தருவீ ரென்றார்

விளக்கம்:

பிள்ளையை நான் தாரேன் நீங்கள் பெற்ற பிள்ளைகளை நான் தாரேன். அதில் எந்தவிதமான கள்ளத்தன்மை எதுவும் இல்லை.

அரிகோணமாமலையில் அமைந்த கங்கையிலே உங்களை நான் கண்டு உங்களுடைய உங்களிடம் பேச்சு கொடுத்து உங்களுடைய மன உறுதியை பார்த்து உங்களின் மூலம் சான்றோர் மக்களை பெற்றெடுக்க வேண்டும் என்று எண்ணி உங்களுடைய ஆடைகளை எல்லாம் நனைத்து குளிர் தாங்க முடியாமல் நின்ற உங்களிடம் நான் அனலாக இருந்து உங்களின் மூலம் சான்றோர் மக்களை பெற்றெடுக்க செய்தேன்.

ஆனால் நீங்கள் என்னை என்னுடைய மாய செயலை அறியாமல் என்னை எரிக்க துணிந்தீர்கள். அவ்வாறு நீங்கள் எரிக்க துணிந்தீர்கள். இந்த செய்தியை நான் வெளியில் சொல்ல மாட்டேன். நான் சொல்லாமல் உங்களுடைய பிள்ளைகளை நான் தருகின்றேன்.

அரிகோண மாமலையில் இருக்கின்ற அந்த அருவனம் மீதிலே அமிர்தவாழ் கங்கையிலே நீங்கள் தினந்தோறும் நீராடி வந்தீர்கள். அவ்வாறு வருகின்றபோது உங்களிடம் நான் வந்து இன்று ஒருநாள் மட்டும் என்னுடைய தலையில் அபிஷேகம் செய்யுங்கள் என்று கேட்டேன். ஆனால் நீங்கள் வாய்மொழி மதமாக முடியாது என்று மறுத்து உரைத்தீர்கள். ஆகவே உங்களிடம் இருந்து உங்கள் ஆணவத்தை அடக்குகின்ற விதமாக தண்ணீர் திரளாமல் செய்தேன்.

ஆகவே அவ்வாறு செய்து உங்களை நாங்கள் வனத்தில் போய் தவம் இருக்கும்படியாக செய்தேன். அப்போது நீங்கள் பெற்று எடுத்து உங்களுடைய பிள்ளைகளை நான் தருகின்றேன். நீங்கள் என்னுடைய உபாயத்தை அறியாமல் என்னை ஏளனமாக பேசியதால் இங்கே இருக்கிறீர்கள். ஆனால் மேலோக பிள்ளைகளாக இருக்கக்கூடிய ஏழு புவியிலுள்ள சான்றோர் மக்களை உங்களின் மூலம் நான் பெறச் செய்து பேணியே வளர்த்தப் அந்த பிள்ளைகளை எல்லாம் தருகின்றேன் என்றார்.

மடமையிலாகிய நீங்கள் வந்து என்னை நெருங்க வேண்டாம். நீங்கள் என்னை வந்து தொடவோ வளைந்து பிடிக்கவோ இங்கே நியாயம் இல்லை. நீங்கள் எல்லோரும் தூரவே அகல நில்லுங்கள்.

ஏனென்றால் அந்த கான்வனமாகிய அந்த அடர்ந்த வனத்திலே நீங்கள் பெற்ற அந்த பிள்ளைகளுடைய அடையாளங்களை நான் அறியும்படியாக சொன்னீர்களே ஆனால் இப்போது உங்களுடைய மதலைகளையும் தந்து நாம் உலகமும் அருள்வோம் என்று அந்த கன்னியர்களிடம் நாராயணமூர்த்தி கூறினார்.

உடனே அந்த கன்னியர்கள் ஐயனே குருவே எங்கள் ஆதியே சோதியான மெய்யனே ஒப்பில்லாத வேதநல் மணியே கேளுமோ! நாங்கள் பெற்ற பிள்ளைகளை அந்த இடத்திலே நாங்கள் போட்டுவிட்டு தவத்திற்கு சென்று விட்டோம். கன்னியர்களாக இருந்த நாங்கள் குழந்தைகளை ஈன்று எடுத்தால் இந்த உலகம் ஏசி பளிக்குமே என்று எண்ணி பெற்ற பிள்ளைகளை பெற்ற இடத்திலே போட்டுவிட்டு நாங்கள் வெட்கத்தின் காரணமாக தலைகுனிந்து தவம் இருப்பதற்காக சென்று விட்டோம். ஆகவே எங்கள் பிள்ளைகளினுடைய அங்க அடையாளங்கள் எங்களுக்கு தெரியாது ஐயா. எங்களுடைய பிள்ளைகளை தாருங்கள் என்று அவர்கள் வேண்டி நிற்கின்றார்கள்.

உடனே நாராயணமூர்த்தியிடம் அந்த சப்தமாதர்கள் ஏழு பேரும் பிள்ளைகளை அழுது முறையிட்டும் கேட்கின்றார்கள்.

எப்படி என்றால் மதலையை தாரும் ஐயா நாங்கள் பெற்ற மதலயை தாருமையா! அந்தக் குழந்தைகளை தாருங்கள் எங்களுடைய வயிரெல்லாம் கொதிக்கிறது. அந்த குழந்தைகளின் உடைய மொழிகள் கேட்டு கொஞ்சி குழைந்திருப்பதற்காக அவர்களோடு நாங்கள் அன்பு பாராட்டி வாழ்வதற்காக குழந்தைகளை எங்களுக்கு தாருங்கள் ஐயா, தாங்கள் காட்டித் தாருங்கள் காரணம் நீங்கள் காட்டி தந்தால் தான் இந்த குழந்தைகள் எல்லாம் யார் யாருடையது என்பது எங்களுக்கு தெரியும். ஆகவே நாங்கள் பெற்ற அந்த குழந்தைகளை காட்டித் தாருங்கள் என்று முறையிட்டனர்.

பெற்ற நாள் இன்றுவரையிலும் நாங்கள் பிள்ளைகளை பார்க்கவில்லை எங்களுடைய மனமெல்லாம் நொந்து எங்களுடைய உடலெல்லாம் தளருதய்யா, பெற்றவுடனே அந்த இடத்திலே பிள்ளைகளை நாங்கள் போட்டுவிட்டு சென்றுவிட்டோம். காரணம் வாலை பருவமாகிய அந்த கன்னி பருவத்திலே பிள்ளைகளை பெற்றெடுத்த காரணத்தினால் நாங்கள் அந்த வேதனையின் காரணமாக பிள்ளைகளை அந்த இடத்திலே போட்டுவிட்டு தவத்திற்குச் சென்றுவிட்டோம். 12 ஆண்டு காலமாக நாங்கள் கடுமையாக தவம் செய்தோம். எங்களுடைய கால் இளகாமலையே அந்த காட்டில் தவசி இருந்தோம். தவமிருக்கின்ற போது சரியாக உணவு எங்களுக்கு இல்லை. சரியான உறக்கமில்லை, யாரும் எங்களுக்கு உதவி புரியா வண்ணம் ஒருவரின் தஞ்சம் இல்லாமல் மூணு நாலு காலம் வரை நாங்கள் கடுமையான தவம் இருந்தோம்.

சிங்கம், புலி, கரடி திரியும் அந்த வனத்தின் ஊடாக நாங்கள் நங்கைமார்கள் ஏழு பேரும் இவ்வளவு காலமும் கடுமையாக அந்த அடர்ந்த வனத்திலே நாங்கள் தவம் இருந்தோம். இவ்வளவு காலம் தவம் இருந்த பிற்பாடும் எங்களுடைய பிள்ளைகளிடைய மனுவையற்றிலேயே மீண்டும் நாங்கள் பிறந்து இங்கே உதித்து வந்திருக்கின்றோம்.

நாங்கள் முன்பு பிறந்த இடத்தில் செல்வம் எவ்வளவு இருந்தது.நாகள் வாழ்ந்து வந்த இடத்தின் சிறப்பு எவ்வாறு இருந்தது தெரியுமா? ஆனால் அவற்றை மறந்து இந்த கலியில் வந்தோம். இந்த கலியின் காரணமாக நாங்களும் இங்கே என்ன செய்கிறோம் பிறந்து வந்து இந்த துன்பங்களை எல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.
ஆண்ட சிறப்பு என அருஞ்சுனைஆடலெனன்ன இந்த காண்டம் நிறைவேற்றுவதற்காகவா இந்த கலியிலே வந்தோம்.

ஆகவே இந்த கலியிலே நாங்கள் வருவதற்கு முன்பாக எவ்வளவு சிறப்புகளோடு இருந்தோம். கொண்டிருந்த செல்வம் என்ன உடுத்த துயில் நியாயம் என்ன? கொண்டிருந்த விதி பயனோ எங்களுடைய கர்ம விதி பயனின் காரணமாக இந்த கலியிலே வந்து தோன்றி வேதனைப்படுகின்றோம் ஆகவே நாங்கள் பெற்ற பிள்ளைகளை தாருமையா என்று வேண்டி நின்றார் கள்.

மேலும் கொண்டிருந்த செல்வம் என்ன உடுத்த துயில் நியாயம் என்ன பொன்னு பந்தல் ஆரம் என்ன பூ தொடுக்கும் சாரம் என்ன முன்னுரைத்து விட்டது போல் இந்த கலியிலே வந்து பிறந்தோம். மேலுலகத்தார்கள் எல்லோரும் போய் பிறக்க வேண்டும் என்று சொன்ன அந்த காரணத்தின்படி இந்த கலியிலே நாங்கள் வந்திருந்து எவ்வளவு துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். ஆகவே எங்களுடைய பிள்ளைகளை எல்லாம் தாருங்கள் ஐயா என்று வேண்டினார் கள்.

பந்தடிக்கும் வீரம் என்ன பைம் பொன்னிற மேடை என்ன குந்தடிக்கமாக இந்த உலகிலே நாங்கள் குதித்து வந்தோம். ஆகவே எங்களுடைய பிள்ளைகளை எல்லாம் தந்து நீங்கள் இந்த புவியை ஆள வேண்டும் அய்யா என்று வேண்டி நின்றார்கள்.

கன்னியழியும் முன்பாக நாங்கள் காதல்தனைப் பெற்றுவிட்ட காரணத்தினால் பிள்ளைகளின் முகத்தை பாராமல் நெடுநாளாக நாங்கள் தவம் இருந்து விட்டோம். ஆகவே அவர்களை இப்போது நாங்கள் சேர்த்து எடுத்து எங்களுடைய கமல முகத்தோடு அணைத்து பெண்களாகிய நாங்கள் பால் கொடாமல் இந்த பெருக வனத்திலே சென்று தவம் இருந்துவிட்டோம்.

எங்களுடைய பாலிழகி பாலமிருதம் எல்லாம் பாலாறாய் சொரியுதையா எங்களுடைய மனக்கவலை எல்லாம் மாற்றி வைக்க வேண்டும் அய்யா. வர்ண நிறமது மக்களுடைய சாயலதும் பிள்ளைகள் எந்த நிறத்தில் எப்படி இருப்பார்கள் எந்த உருவத்தோடு இருப்பார்கள் என்பது எதுவும் எங்களுக்கு தெரியாது ஆகவே எங்களுடைய கண்ணதிலோ நாங்கள் கண்டறியவில்லை கையதிலோ நாங்கள் எடுத்து கொஞ்சி விளையாடியிருக்கவில்லை ஆகவே அந்த குழந்தைகளை எங்களுக்கு தாருமையா அங்கமெல்லாம் சோருதய்யா ஆவி மெத்த வாடுதையா தங்கமணியே நாங்கள் பெற்ற தவமணியாகிய சான்றோர் மக்களை தாருங்கள் அய்யா என்று வேண்டி நின்றார்கள்.

இவ்வாறு நாராயண மூர்த்தியிடம் மதலைகளை தந்து எங்களுடைய மனக்கவலைகளை எல்லாம் மாற்றி பிள்ளைகளுக்கும் எங்களுக்கும் குருமுடியாகிய இறையுள்ளத்தை அருளி பதியுகமாகிய தர்மயுகத்தில் மன்னராக இருந்து ஒரு குடைக்குள் உலகாள உங்களுடைய பிள்ளைகள் ஆன சான்றோர் மக்களை தந்து அருள் புரிய வேண்டும் என்று இறைஞ்சி தொழுது நின்றார்கள்.

சப்த கன்னியர்களின் வேண்டுதல்

விருத்தம்

தருவீ ரெனவுரைக்கு மடமாதே நீங்கள்
சந்ததியைப் பெற்றிடத்தில் தயவாய்ப் பாரும்
பெருகியே வாழ்ந்திருப்பா ரங்கே சென்று
பெற்றிடத்தைப் பார்க்குகையி லுண்டு மங்கே
மருவி யென்னைக் கேளாதே காட்டினூடே வளர்ந்திருப்பார்
கண்டுகொள்வீர் திட்டஞ் சொன்னோம்
சருவியென்னை நெருங்காதே மடவீ ரெல்லாம்
சந்ததியைத் தேடிவனஞ் செல்லு வீரே

விருத்தம்

செல்லுவீ ரெனமொழிந்த தேனே கண்ணே
சீமானே நாமாது புரக்கு மாலே
பல்லுயிரு மிகப்படைத்தப் பாக்கிய வானே
பருவனத்தி லெங்களைநீர் பற்றி வந்து
தொல்லைவினை செய்துநாம் சுமந்து பெற்ற
சுத்தகுல மானதெய்வச் சான்றோர் தம்மை
இல்லிடத்தி லிப்போது தருகி லானால்

இழுத்து வும்மைச் சந்தியிலே ஏற்றுவோமே

விருத்தம்

சந்தியி லேற்றுவோ மென்ற மாதேகேளு
தருவதுண்டோ முன்கடன்கள் தந்த துண்டோ
பந்தியழித் துங்களுடப் பேச்சை நானும்
பகருவே னுங்களைப் பார்பழித்துப் பேச
முந்தியிதை யுரைத்திட்டே னோடிப் போங்கோ
உலகநருள் அறிந்தாக்கால் சிரிக்க லாகும்
சிந்தனைக்கே டாகும்வரை நிற்க வேண்டாம்
தேன்மொழியே மறுவிடம்போய்த் தேடு வீரே

விருத்தம்

தேடுவீ ரெனமொழிந்த இந்திர ஜாலம்
தெய்வமட மாதரொடு செலுத்த வேண்டாம்
நாடுபதி னாலறியு முமது கள்ள
ஞாயமது எங்களொடு நவில வேண்டாம்
வீடுவழி தோறும்விருந் துண்டு முன்னே
மெல்லிமட வார்சிலரைக் கொள்ளை கொண்டு
பாடுபட்ட பாட்டையினி நாங்கள் சொன்னால்
பாரிலுள்ளோ ருமைப்பேசிப் பழிப்பர் காணும்

விருத்தம்

பழிப்ப ரெனச்சொன்ன இளம்பாவை மாரே
பாரிலுள்ளோ ரறிவார்கள் பச்சை மாலின்
களிப்பதுவுங் காண்டமுறை நூல்கள் தோறும்
காரணத்தைச் சொல்வார்கள் கருதிக் கேளு
சுழிப்பதுவு மமைப்பதுவும் நமக்குள் ளாகும்
தோகையரே யிதுஎனக்குச் சொந்த வித்தை
குளிப்பதுவில் சுனையாடி மதலை யீன்றக்
கோலமதைச் சொன்னாக்கால் குறைவ தாமே
குறைவதா மெனச்சொன்னக் குறவா கேளும்
காவேங் கிரிவாழுங் குலமா மாதர்
மறைமுதல்வ னானசிவ னார்க்கு நாங்கள்
வந்துசுனை யாடிகெங்கைத் திரட்டி யேகத்
துறையறியாக் களவாண்டுத் தேய்ந்த கள்வா
தொல்புவிக ளறியாதோவுன் சுத்தக் கள்ளம்
இறையளவு மெய்யில்லாப் பொய்யே சொல்லும்
ஏமாளிக் கள்ளரென எவருஞ் சொல்வார்

கள்ளரெனச் சொல்லிவந்த மாதே நீங்கள்
களவாண்டீர் கயிலையதி லீசர் முன்பில்
வெள்ளமது திரளாமல் கள்ளத் தாலே
வெம்மருண்டு நின்றவித வெட்கங் கண்டு
வள்ளல்சிவ னாரறிந்துக் கலியில் சான்றோர்
மேல்வழியில் பிறக்கவென்று சபித்தார் முன்னே
உள்ளதெல்லாஞ் சொல்லிடுவே னோடிப் போங்கோ
ஓகோகோ வெனச்சொல்லி யுறுக்கி னாரே

உறுக்கிநீ ருரைத்தசுணை யுமக்கே யல்லால்
ஓவியங்க ளேழ்பேர்க்கு முண்டோ சொல்லும்
இறுக்கிவைத்த நீரிளகச் சேய்த கள்ளம்
ஈசர்முத லெல்லோருஞ் சொல்லு வார்கள்
சிறுக்குமிடை மாதருட வீட்டில் வெண்ணெய்த்
திருடியுண்டக் கள்வரெனச் சொல்வா ரும்மை
பொறுக்கஇனி மாட்டோங்கா ணுமது ஞாயம்
புகன்றிடுவோ மினியண்டம் பொடியத் தானே

விருத்தம்

பிட்டுக்காய் மண்சுமந்து வைகை தன்னில்
பிரம்படிகள் பட்டதுவும் போதா தென்றோ
கெட்டுமிகப் பட்டீரே இடைச்சி கையால்
கேள்வியில்லா முப்பரத்தில் கிழவன் போலக்
குட்டுமிகப்பட்டுமது மீசைதன்னில்
குறுங்கண்ணி போட்டிழுத்துக் குனிய வைத்தப்
பொட்டதுவுங் குலைத்திடுவோம் நாங்கள் பெற்றப்
பிள்ளைதனை தந்துபுவி யான வைப்பீர்

விருத்தம்

ஆடெடுத்தக் கள்வரல்லோ வுமக்குச் சூடு
அணுவளவுந் தோற்றாம லலைந்து எந்த
நாடடுத்த இடமெல்லாம் வேசம் போட்டு
நாணமதொன் றில்லாமல் நாரி மார்தம்
வீடுடுத்த மனைதோறு மிரட்டிக் கொஞ்சி
வேசியொடு கூடிவிளை யாடுங் கள்ளக்
கூடெடுத்த மறையல்லோ எங்கள் தம்மைக்
குவலயத்தில் கள்ளியெனக் கூறி னீரே

விருத்தம்

இன்னமுண்டு வுமக்குவெகு பங்கந் தானும்
எடுத்துரைத்தா லிப்போது இளப்ப மாகும்
முன்னமைத்தப் பாலரையு மினத்திற் சேர்க்கை
முழுவதையுந் தந்துபுவி யாள வைப்பீர்
இன்னிமிப்போ தாராம லிருந்தீ ரானால்
ஈரேழு யுகமறிய இழுத்து உம்மை
அன்னமது அருந்தாம லிழுத்துக் கொள்வோம்
அதுவறிந்து பாலரைத் தந்தாளு வீரே

விருத்தம்

பாலரைத்தந் தாளுவீ ரெனமொழிந்த பாவைமாரே
பகற்பொழுது கழித்துவெள்ளி யுதிக்கும் நாளை
காலமேநீ ரெல்லோரும் வந்தீ ரானால்
கதிரவனும் போயடைந்து கங்கு லாகும்
சீலமுடன் தென்றலுக்கு மழைக்கும் நானோர்
சீட்டெழுதித் தேவரையும் வருத்தி யிங்கே
கோலமண முங்களைநான் புரிந்து கொள்வேன்
குடிலதுக்குப் பேயமுது குடித்து வாரும்

விளக்கம்:
சப்த மாந்தர்கள் ஏழு பேரும் நாராயண மூர்த்தியிடம் பிள்ளைகளை தாருங்கள் எங்களுடைய சந்ததிகளை நாங்கள் தாருங்கள் என்று கேட்டவுடனே நாராயணமூர்த்தி அம்மைமார்களிடம் சொல்லுகின்றார், மடமாதே நீங்கள் சந்ததியை பெற்ற இடத்தில் போய் பாருங்கள் அங்கே அவர்கள் பெருகிய வாழ்ந்திருப்பார்கள். அங்கு அவர்கள் இருப்பார்கள் .ஆகவே என்னிடம் நீங்கள் கேட்க வேண்டாம். காட்டிலே நீங்கள் எந்த இடத்தில் போட்டு வந்தீர்களோ அங்கு சென்று பார்த்துக் கொள்ளுங்கள் என்னிடம் கேட்டு நெருங்க வேண்டாம் என்று அங்கே கட்டளையிட்டார்.
உடனே அந்த அம்மைமார்கள் சொல்லுகிறார்கள், எங்களை அவ்விடம் சென்று தேடுங்கள் என்று சொன்ன தேனே கண்ணே சீமானே நாமாது புரக்குமாலே பல்லுயிரும் மிகப் படைத்த பாக்கியவானே, அந்த காட்டிலே நீங்கள் எங்களை பற்றி வந்து தொல்லை வினைகள் எல்லாம் செய்து நாங்கள் சுமந்து பெற்ற அந்த சான்றோர்கள் தன்னை இவ்விடத்தில் இப்போது நீங்கள் தர வேண்டும். இல்லை என்றால் உங்களை நாங்கள் சந்தியிலே ஏற்றுவோம் என்றுக் கூறினார்கள்.
உடனே ஐயா அந்த அம்மார்களிடம் சந்தியிலே ஏற்றுவோம் என்றுச் சொன்ன மாதே நீங்கள் கேளுங்கள். நான் உங்களிடம் ஏதேனும் கடன் பட்டிருக்கின்றேனா? இல்லது உங்களிடம் இருந்து நான் ஏதேனும் பெற்றிருக்கின்றேனா உங்களுக்கு நான் தர வேண்டியது ஏதாவது இருக்கின்றதா உங்களுடைய பேச்சை என்னிடம் நீங்கள் கூற வேண்டாம்

(இறைவன் ஒருநாளும் யாருக்கும் கடன் பட மாட்டார். அவரவர் வினை கேட்டு வளமை உடனுடனே கொடுத்து விடுவது தான் அவருடைய இயல்பு அவன் கருணையின் உருவானவன் யாருக்கும் எந்த பாக்கியும் வைக்க மாட்டான் நாம் தான் அவனுக்கு கடமை பட்டு இருக்கின்றோமே தவிர அவர் அல்ல என்பதை நமக்கு உணர்த்தவே இவ்விதம் அம்மைமார்களிடம் கேட்கின்றார் )

மேலும் இங்கே பேச்சை வளர்த்துக் கொண்டு இருக்காதீர் கள். ஓடுங்கள் இல்லை எனில் உங்களுடைய கதையை கதைகளை எல்லாம் நான் சொல்ல வேண்டி இருக்கும் ஆகவே

முந்தி இதைச் சொல்லிட்டேனால் உலக மக்கள் அறிந்தால் சிரிப்பார்கள். நீங்கள் அல்லவா உங்களுடைய கற்பை இழந்து நீங்கள் வழி தவறி நின்றீர்கள். இந்த உலக மக்கள் அதை அறிந்தால் உங்களுக்குத்தான் அதை இழப்பம் ஆகும். ஆகவே சிந்தனை கேடாகும் வரை இங்கே நிற்க வேண்டாம். நீங்கள் இந்த இடத்தை விட்டு நகர்ந்து விடுங்கள் என்று சொன்னார்.

உடனே அந்த தெய்வமடவார்கள் சொல்லுகின்றார்கள் அய்யாவே வனத்தில் போய் தேடுங்கள் என்றுக் கூறிய உம்முடைய இந்திரஜாலும் இங்கு தெய்வமடாவாராகிய எங்களோடு நீர் காட்ட வேண்டாம். உம்முடைய அந்த கள்ளமானது நாடு அறியும். விடுவழி தோறும் சென்று விருந்துகளை உண்டு மெல்லிமடைவார்களில் சிலரின் மனதைக் கொள்ளை கொண்டு , அதாவது வெள்ளை உள்ளம் கொண்ட ஜீவாத்மாகளைத் தேர்ந்து எடுக்க நீர் புரிந்த மாயசாலங்களையும் அதற்காக பட்ட பாட்டையும் நாங்கள் சொன்னால் இந்த உலகமே பழித்து பேசும். ஆகவே எங்களோடு இந்த வார்த்தைகளை எல்லாம் நீர் சொல்ல வேண்டாம் என்று ஐயாவிடம் மறுத்து பேசினார்கள்.

வைகுண்டர் அம்மைமார்களிடம் சொல்லுகின்றார். இந்த உலக மக்கள் எல்லோரும் என்னை பழித்து ஏசுவார்கள் என்று சொன்னீர்களே! நான் யார் என்பது இந்த உலக மக்களுக்கு தெரியும். கழிப்பதும் காண்டம் முறை நூல்கள் தோறும் அதாவது ஒவ்வொரு யுகங்களிலும்
நான் நடத்திய சூட்சம விளையாட்டுகள் எதற்காக நடத்தப்பட்டது ஏன் நடத்தப்பட்டது என்பதை மக்கள் எல்லோரும் உணர்ந்திருக்கின்றார்கள்.

ஒரு ஆன்மா முக்தி பெற வேண்டும் என்பதற்காக அந்த ஆன்மாவை பக்குவபடுத்துவதற்காக பல சூட்சம விளையாட்டுகள் நடத்தியது உண்டு. ஆகவே அதனுடைய காரணங்களை எல்லாம் மக்கள் சொல்வார்கள் வேண்டுமென்றால் அவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். இவை எல்லாம் எனக்கு இங்கு என்னுடைய இயல்பினால் அங்கே நடக்கக் கூடியவை. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக நான் செய்யக்கூடிய மாய செயல்கள். இவையெல்லாம் சுழிப்பதும் அமைப்பதும் இது எனக்குள்ளாக கூடிய செப்படி வித்தைகள் ஆகும். என்னுடைய செப்படி வித்தையை யாரும் உணர்ந்து அறிந்து கொள்ள மாட்டார்கள்.

ஆகவே இது என்னுடைய சொந்த வித்தை ஆக இருக்கின்ற காரணத்தினால் இதைப்பற்றி நீங்கள் பேசி யாரிடமும் பயமுறுத்த வேண்டாம். அது மட்டும் அல்ல நீங்கள் அல்லவா சுனையாடுவதற்காக சென்ற இடத்தில் அங்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தீர்கள் இந்த செய்தியை நான் உலக மக்களின் முன்பு சொன்னால் உங்களுக்கு அங்கே நியாயகேடாகிவிடும். ஆகவே இங்கிருந்து சென்று விடுங்கள் என்று அந்த பெண்களிடம் கூறினார்.
எங்களுக்கு குறைவாகி விடும் என்றுச் சொன்ன குறவா கேளும் என்று சப்த மாதர்கள் வைகுண்டரிடம் கூறுகின்றார்கள். நாங்கள் கோவேந்திரியில் வாழ்ந்து வருகின்ற சிவபெருமானுக்கு தொண்டு செய்து வாழ்ந்து வந்தோம். அவ்வாறு கங்கையிலே நீராடி அந்த கங்கையைத் திரட்டி அவருக்கு அபிஷேகம் செய்து வாழ்ந்து வந்த எங்களை, துறை அறியாமலே எங்களுடைய கற்பை களவாண்டு நாங்கள் கங்கையைத் திரட்டிச் செய்து வந்த அந்த அபிஷேகத்தையும் செய்யவிடாமல் ஆக்கி வைத்த கள்வனாக்கும் நீர். சிறிதளவு கூட உண்மையை பேசாமல் பொய்யே பேசுகின்ற ஏமாளி கள்வராக்கும் என்று உம்மை எல்லோரும் அறிந்து கொள்வார்கள் என்று சப்த மாதர்கள் வைகுண்டரிடம் மறுத்து பேசினார்கள் .

உடனே கள்வரென சொல்லி வந்த மாதே நீங்கள் கேளுங்கள் நீங்கள் அல்லவா அங்கு கையிலையில் ஈசர் முன்பில் கங்கையை திரட்ட முடியாமல் கள்ளத்தாலே நின்ற

விதத்தை அறிந்து சிவபெருமான் கலியில் சான்றோர் வழியில் பிறக்க வேண்டும் உங்களையெல்லாம் சபித்தார். உங்களுடைய கள்ளத்தனத்தால் அல்லவா அது நிகழ்ந்தது. ஆகவே இதையெல்லாம் நான் உலக மக்கள் அறியும் படியாக சொல்லி விடுவேன் ஆகவே இங்கிருந்து போய் விடுங்கள் என்று கூறினார்.

உடனே அந்த அம்மைமார்கள் நீர் உரைத்த அந்த பொய்கள் எல்லாம் உமக்கு தான் பொருந்தும். இந்த ஓவியங்களான எங்களிடம் சொல்ல வேண்டாம். இறுக்கி வைத்த நீரிழக செய்த கள்ளம் நாங்கள் எங்களுடைய கற்பின் தன்மையால் கங்கையை திரட்டி சிவபெருமானுக்கு அபிசேகம் செய்து வந்தோம். ஆனால் அந்த கங்கையை திரளாமல் செய்த கள்ளம் உமக்கு தான் பொருந்தும்.
ஓவியங்களான எங்கள் ஏழு பேருக்கும் அது உண்டோ என்று சொல்லுங்கள். இந்த செய்தியானது ஈசர் முதல் வானவர்கள் எல்லோரும் அறிந்து கொள்வார்கள். ஆகவே எங்களிடம் மறுத்து பேச வேண்டாம்.

உம்முடைய திருவிளையாடல்களை சொன்னால் எல்லோரும் ஏளனமாக பேசுவார்கள். காரணம் இடையர்களின் வீட்டிலே சென்று வெண்ணெய்யை திருடியதை கண்டு கள்வரென சொல்லி உம்மை எல்லோரும் துரத்தி அடித்தார்கள். அதுமட்டுமா வெள்ளை உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொண்டு அவர்களுடைய மனதிலேயே இருந்து அவர்களையும் ஆட்கொண்டு விட்டீர்கள். ஆகவே இனி பொறுக்கமாட்டோம் உமது நியாயத்தை புகன்றிடுவோம் இனி இந்த உலகம் பொடியும் படியாக உம்முடைய கள்ளத்தனத்தை உலகிற்கு எடுத்துக்காட்டுவோம் என்று அந்த அம்மைமார்கள் ஐயாவை மீண்டும் அங்கு வளைந்து பேசினார்கள்.

மேலும் புட்டுக்காய் வைகை தன்னில் மண் சுமந்து பிரம்படிகள் பட்டது தெரியாதா அதாவது சான்றோர்கள் மக்கள் இரண்டு பேரை சொழ மன்னன் கொன்று விட்டான் என்றச் செய்தியை அறிந்து ஒரு வேலையாளாக சென்று அங்கே அந்த வேலைக்கு கூலியாக புட்டை பெற்றுக்கொண்டு வேலைக்கு செல்லாமல் இருந்து அந்த மன்னனின் கையால் பிரம்படிகள் பட்டது உலகம் அறியும். அது மட்டும் இல்ல கெட்டு மிகப் பட்டீரே இடச்சி கையால் அதாவது, கண்ணனாக அவதாரம் எடுத்திருக்கின்ற அந்த நேரத்திலே ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று வெண்ணெய்யை திருடி சென்று அங்கே பல மாயஜாலங்களை காட்டினர்.

அந்த நேரம் இடச்சியினுடைய கையாலே அடிகள் பட்டது உங்களுக்கு மறந்து விட்டதா? அது மட்டுமல்ல முப்புரத்திலே கிழவன் போலே சமைந்து அந்த மக்களால் அடிகள் பட்டது உமது மீசையிலே அங்கு கயிற்றால் கட்டி உம்மை குனிய வைத்தது தெரியாதா? இந்த குறுங்கண்ணி போட்டு எடுத்து குனியவைத்த அந்த செய்தியை எல்லாம் நாங்கள் சொல்லிவிடுவோம். ஆகவே எங்களுடைய பிள்ளைகளை தந்து புவியான வைக்க வேண்டும் என்று வேண்டுகின்றார்கள்.

மேலும் சொல்லுகின்றார்கள் ஆடு எடுத்த கள்வரல்லோ நீர் உமக்கு சூடு அணு அளவு கூட இல்லை. ஆயர்பாடியில் ஆயர்கள் அங்கே கொடை கொடுத்து கொண்டிருக்க கூடிய அந்த வேளையிலே பூதமாக இருந்தும் அந்த பூசாரிக்காகவும் இருந்தும் அவர்கள் கொடுத்த கொடைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு அதில் அணு அளவு கூட தோற்றாமல் அலைந்து வெட்கமில்லாமல் நீங்கள் ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று சென்ற இடங்களில் எல்லாம் ஒவ்வொரு விதமாக வேஷம் போட்டு அந்த மக்களிடையே மனதிலே இடம் பிடிப்பதற்காக அவர் அவருடைய எண்ணத்தின் படி அங்கே நாணம் ஒன்று இல்லாமல் மக்களுடைய உள்ளத்திலே வாழ்ந்து வந்தீர்கள்.

மேலும் ஒவ்வொரு மக்களுடைய வீடுகளிலும் இருட்டுகின்ற வேளையிலே சென்று அந்த வேசையுடன் கூடி விளையாடி பல மாய ஜாலங்கள் செய்த கள்ளனாக இருந்தவர் நீர். அதாவது யார் வெள்ளை உள்ளதோடு இறைவனைப் பற்றிப் பிடிக்கின்றார்களோ அவர்களுடைய எண்ணப்படி அவர்களுக்குக் காட்சி கொடுத்து பல பல மாயஜாலங்களை புரிந்தவர் நீர் . ஒவ்வொரு உள்ளங்களை கொள்ளைக் கொள்ளும்படியாக கூடெடுத்தவர், அதாவது அவதாரம் செய்தவர் என்பதை இங்கே அவர்கள் எடுத்து காட்டுகின்றார்கள். ஆகவே நீர் இப்படி செய்யக்கூடிய இந்த செயல்களை நாங்கள் சொன்னோமேயானால் உங்களுக்கு பங்கம் ஆகிவிடும்.

இன்னும் உண்டு உமக்கு பங்கம் அதை எடுத்துரைத்தால் இப்போது இழப்பம் ஆகிவிடும். ஆகவே முன்னமைத்த பாலரையும் எங்களுக்கு தந்து எங்களோடு இந்த உலகம் முழுவதையும் முடி சூடி ஆள வேண்டும். இப்போது நீங்கள் இங்கே தரவில்லையானால் நாங்கள் ஈரேழு உலகம் அறிய இழுத்து உங்களை உணவு அருந்தாமல் மறித்துக் கொள்வோம். ஆகவே எங்களுடைய பிள்ளைகளை தந்து நீர் ஆள வேண்டும் என்று வேண்டுகின்றார்கள்.

உடனே அய்யா அம்மைமார்களிடம் பிள்ளைகளையெல்லாம் தர வேண்டும் என்று கேட்டீர்கள் அல்லவா நீங்கள் எல்லாரும் உங்களுடைய இல்லங்களுக்கு செல்லுங்கள் அதன் பிற்பாடு சூரிய உதயம் ஆகி அதன் பிறகு காலமே நீங்கள் எல்லோரும் இங்கே வந்தீர்களேயானால் கதிரவனும் போய் அடைந்து கங்குலாகும் அப்போது கோலமணம் உங்களைப் புரிந்து கொள்வேன் என்று அம்மைமார்களுக்கு இல்லங்களுக்கு போக விடைக்கொடுத்து அனுப்பினார். அப்போது சீலமுடன் தென்னலுக்கும் மழைக்கும் மேலோன் சிற்றெழுதி தேவரை எல்லோரையும் வருத்தி கோலமானும் உங்களை நான் புரிந்து கொள்வேன் ஆகவே உங்களுடைய இல்லங்களுக்கு சென்று அமுதருந்தி வாருங்கள் என்று ஐயா விடை கொடுத்து அனுப்பினார்.